## மத்திய மகாண சபை - 2019

-------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

------------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-----------------------------------------------------

மத்திய மாகாண சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2020 ஒக்தோபர் 20 ஆந் திகதி வெளியிடப்பட்டதுடன், தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை செப்தம்பர் 24 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10(1) உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மத்திய மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

--------------------------------------------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்குஇணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் மாகாண திறைசேரி உள்ளடங்களான அந்தந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மத்திய மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை**

**1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதிக்கூற்றுக்கள் காசு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதாக கணக்கீட்டு கொள்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் நிதி நிலைமை தொடர்பான | வெளிப்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கை அடிப்படையல் கணக்குகுள் | மத்திய மாகாண சபையின் நிறுவனங்களிலிந்து மத்திய அரசின் நிறுவனங்கள் மற்றும் உள்ளுராட்சி |

| | | | |
|---|---|---|---|
| | கூற்றில் நிதிச்சொத்துக்களாக அனைத்து மாகாண கடன் மீதிகளை தீர்வுசெய்யும் கணக்கின் மீதி ரூபா 11,573,474 ஆகவும் செலுத்த வேண்டிய வைப்புக்கள், நானாவித பொறுப்புக்கள் அனைத்து மாகாண கடன் மீதி தீர்வுசெய்தல் கணக்கின் கூட்டுத்தொகை ரூபா 598,903,701 பொறுப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது. | தயாரிக்கப்பட வேண்டும். | நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து மாகாண சபைக்கு அறவிட வேண்டிய முற்பணமாக வழங்கப்பட்ட கடன் நடைமுறைச் சொத்துக்களாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் விதவவை ஆநாதைகள், பொது வைப்புக்கள் மாபனாவதுர வள நிலைய கட்டுநிதி மீதிகள், அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கடன் மீதிகள், நிதியாண்டின் இறுதயில் மாகாண திறைசேரக்கு கையளிப்பு அடிப்படையில் உரிய உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படாமையால் பொறுப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | மூலதனச் சொத்துக்கள் மேம்படுத்தல் மற்றும் கையேற்றலுக்காக மீளாய்வாண்டில் 08 நிறுவனங்களால் செலவிடப்பட்ட ரூபா 1,228,090,608 பெறுமதி நிதி நிலைமை கூற்றில் நிதியல்லாத சொத்துக்களாக காண்பிக்கப்படாதிருந்ததுடன் அப்பெறுமதியால் நடைமுறையல்லாத சொத்துக்கள் ஒதுக்க நிதியம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | மூலதனச் செலவினத்தை மூலதனமாக்குவதற்கும் அவற்றை நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தவும் நடவடிக்கை எடுத்தல் | குறைபாடுகளை ஏற்றுக்கொள்கின்றேன். |
| (இ) | பிரதேச செயலகங்களில் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 37,513,684 ஆன பொது வைப்புக்கள் மீதி நிதி நிலைமை கூற்றில் நிதிச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை | பொது வைப்புக்கள் மீதி நிதி நிலைமை கூற்றில் நிதிச் சொத்துக் களின் கீழ் காட்டப்பட்டிருந்தமை. | கருத்து தெரிவிக்கவில்லை. |

## 1.6.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்கிற்கான கடனின் மீளாய்வாண்டு இறுதி வரை காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 171,994,728 ஆன மீதி பல ஆண்டுகளாக தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தீர்வு செய்யப்படாத மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மத்திய மாகாணத்தில் நோயாளர் உதவிச் சேவைகளை தடையின்றி தொடர்ச்சியாக நடாத்திச் செல்தற்காக கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணககின் ஊடாக நிறைவேற்றப்பட வேண்டியுள்ளதால் வரிசை அமைச்சிடமிருந்து கொடுப்பனவிற்காக பணம் கிடைத்த பிறகு ரூபா 171,988,242 ஆன மீதியை எதிர்வரும் காலங்களில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் ரூபா 6,486 ஆன மீதி மாகாண திறைசேரியுடன் கலந்துரையாடி தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 2001 ஆம் ஆண்டின் கணக்கு குழு கூட்டத்தின் |

| | | | |
|---|---|---|---|
| | | | போது தீர்மானிக்கப்பட்டது. |
| (ஆ) | நடைமுறைப் பொறுப்பின் கீழ் மீளாய்வாண்டின் இறுதியில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 6,956,869 ஆன அனைத்து மாகாணங்களுக்கு இடையே இடமாற்ற கடன் மீதி தீர்வுசெய்வதற்குப் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அதில் ரூபா 1,088,623 ஆன மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 2,131,194 வரை அதிகரித்திருந்தது. | கடன் மீதிகளை தீர்வு செய்வதற்குப் நடவடிக்கை எடுத்தல் மற்றும் தொங்கல் கணக்கு மீதிகள் இணங்காணப்பட்டு தீர்வுசெய்வதற்கும் க்கப்பட வேண்டும். | மாகாண திறைசேரி மாகாணத்தின் திணைக்களங்கள் அமைச்சுக்கள் என்வற்றிற்கு இடமாற்றம் ெற்று வந்த மற்றும் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதியை கையேற்று தீர்வு செய்யும் வரை செலுத்த வேண்டிய மீதிகள் காண்பிக்கப்படுவதால் அனைத்து மாகாணத் தொங்கல் கணக்கிலும் இனங்காணப்படாத கடன் மீதிகளை இனங்கண்டு கணக்கீடு செய்யும் வரை கடன் மீதிகள் காண்பிக்கப் படுவதாகவும் குறித்த கடன் மீதிகளை துரிதமாக தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | வெவ்வேறு பொறுப்புக் கணக்கில் வருடக் கணக்காக மாற்றமுராது முன்கொண்டு வரப்படும் ஹட்டன் சீடா முற்பணக் கணக்கில் ரூபா 716,768 ஆன மீதியை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாமதமின்றி தீர்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இக்கணக்கு மீதி மாபனாவதுர வள நிலையத்தின் முற்பணக் கணக்கிற்கே உரித்தாவதுடன் தட்டச்சு தவறின் காரணமாக ஹட்டன் சீடா முற்பணக் |

| | | |
| --- | --- | --- |
| | | கணக்கென குறிப்பிடப்பட்டிருந்தது. மாபனாவதுர வள நிலையத்தின் முற்பணக் கணக்கினை மூடிவிடுவதற்காக ஆளுனரின் அங்கிகாரம் கிடைத்துள்ளதுடன் அதன் எதிர்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ள்பபட்டு வருகன்றன. |

### 1.6.3 தீர்வுசெய்யப்படாத கட்டுநிதி மீதிகள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2003, 2006 மற்றும் 2019 ஆண்டுகளுக்குரிய ரூபா 37,930,645 கூட்டுப்பெறுமதியான தீர்வுசெய்யப்படாத முற்பண மீதிகள் காணப்பட்டதுடன் அம்மீதியில் 2019 ஆம் ஆண்டிற்குரிய 17 நிறுவனங்களின் தீர்வு செய்யப்படாத கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 37,713,088 ஆக இருந்தது. | மேலும் தீர்வுசெய்ய வேண்டிய கட்டுநிதி மீதிகளை தீர்வு செய்ய நடவடிக்கை எடுத்தல். | 2003 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 136,243 ஆன மீதிகளில் ரூபா 14,150 ஆன மீதியொன்று அறவிடப் பட்டுள்ளதாகவும் 2006 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 81,314 ஆன மீதி தொடர்பாக திறைசேரி யினதும் கணக்கேடு களுக்கு இடையே வேறுபாடொன்று உள்ளதாகவும் அதனை தீர்வு |

செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் 14 நிறுவனங்களின் ரூபா 34,101,770 ஆன கட்டுநிதி தீர்வு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிய தருகின்றேன்.

## 1.7 இணக்கமின்மை

**சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமைகள்**

| | | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | சட்டரீதியான ஏற்பாடுகள் | | | |
| | (i) | அரசின் காணிக் கட்டளைச் சட்டத்தின் 180 ஆம் கட்டளை பிரகாரம் அனுமதியற்ற அரசின் காணிகளை பிடித்துக் கொள்வதை தவிர்ப்பதற்காக வெளிக்கள உத்தியோகத்தர் மூலம் அறிக்கை இரு வாரத்திற்கு ஒருமுறை பெற்றுக்கொள்ள வேணடிய போதும் மீளாய்வாண்டில் 20 கிராம சேவையாளர் பிரிவுகளில் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிர்வாக கிராம உத்தியோகத்தரின் மூலம் குறித்த உத்தியோகத்தர்கள் போதியளவில் அறிவூட்டப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டின் போது இரு வார அறிக்கைகள் முறையாக பெற்றுக் கொள்கின்றேன். |
| | (ii) | 1918 இன் 06 ஆம் இலக்க வியாபார பெயர் பதிவு செய்தல் சட்டத்தின் பிரகாரம் மத்திய மாகாணத்தில் பதிவுசெய்யப்படாத 9071 | சகல வியாபாரங்களையும் பதிவு செய்யப்பட வேண்டும் | பதிவு செய்யப்படாத வியாபாரங்களை பதிவு செய்யுமாறு வியாபாரிகள் அறிவூட்டப்பட்டுள்ளனர். |

| | | |
|---|---|---|
| வியாபாரங்கள் காணப்படுவதாக இனங்காணப்பட்ட போதும் அவ்வியாபார கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) 1942 இன் அரச சேவைகள் சேமலாப நிதிய கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் மாகாண சபையின் தலைவரின் தனிப்பட்ட பதவியணியினரின் 11 உறுப்பினர்களுக்காக 2018 ஒக்தோபர் முதல் 2020 யூலை வரை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த படிகளுக்காக அரச சேவைகள் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,508,130 ஆன ஊழியர் பங்களிப்பு தொகை அந்நதியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்க வில்லை. | கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் செயற்படல். | குறைபாட்டை ஏற்றுக்கொள்கின்றேன். |

(ஆ) மத்திய மாகாண நிதி விதி - 60

-----------------------------------------------

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 18 சந்தர்ப்பங்களில் இடம்பெற்ற சேதங்கள் மற்றும் 2018 ஆம் ஆண்டில் 41 சந்தர்ப்பங்களில் இடம்பெற்றிருந்த சேதங்கள் பிரதான அலுவலகத்தினால் பேணிச் செல்லும் தேங்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அச்சேதங்களுக்காக முறையே ரூபா 1,252,893 மற்றும் ரூபா | உரிய சட்டங்கள், விதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | குறைபாட்டை ஏற்றுக்கொள்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | 5,229,945 காப்புறுதி இழப்பீடாக கிடைத்திருந்தது. | | |
| (இ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்<br>--------------------------------------------- | | |
| | மாகாண கல்வி திணைக்களத்தின் 02 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 1,477,010 பெறுமதியான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | காலாவதியான வைப்புக்கள் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டி ருக்கவில்லை | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ஈ) | சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கை<br>------------------------------------------------------- | | |
| | பீஎஸ்/சீஎஸ்ஏ/11-18 மற்றும் 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதிய அரச செலவின செலவின முகாமைத்துவ சுற்றறிக்கையில் நிதிஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யாதிருக்கையில் 2018 ஒக்தோபர் 15 முதல் 2019 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை மாதமொன்றுக்கு ரூபா 40,000 வீதம் மொத்தம் ரூபா 420,000 ஆன வீட்டு வாடகை படியொன்றினை மாகாண சபையின் தலைவருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | CPC/CM/CB/2013/35 ஆம் இலக்க 2013.11.27 ஆந் திகதிய மத்திய மாகாண அமைச்ரவை தீர்மானத்தின் பிரகாரம் தலைவருக்கு உத்தியோக விடுதியொன்றை பெற்றுக்கொள்ள மாதமொன்றுக்கு ரூபா 40,000 வீதம் மாதாந்த படியொன்றை பெற்றுக் கொள்ள அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததாகவும் அதன் பிரகாரம் தலைவருக்கு ரூபா 40,000 வீதம் படியொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (உ) | ஏனைய சுற்றறிக்கை<br>------------------------------------ | | |
| | 2016 மார்ச் 09 ஆந் திகதிய | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | 05/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நிதி ஏற்பாடு செய்யப்படா திருக்கையில் மாகாண சபையின் தலைவருக்கு மாதமொன்றுக்கு ரூபா 95,000 வீதம் 2018 மார்ச் முதல் 2020 யூலை வரை ரூபா 2,593,382 ஆன போக்குவரத்து படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | வேண்டும். | தலைவர் பதவியை வகிக்கும் ஒருவர் அரச உத்தியோகத்தர் ஒருவர் அல்லாதிருந்ததுடன் சனாதிபதி செயலாளரின் PS/ASA/11-18 மற்றும் 2018.10.12 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் அவருக்கு உத்தியோகபூர்வ வாகனம் பயன்பாடு மற்றும் எரிபொருள் படிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மாகாண சபையின் நிதி அதிகாரம் முதலில் கௌரவ ஆளுனருக்கே உரித்தாகின்றது. |

## 2. வருமான நிர்வாகம்

--------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------------ | ---------------- | --------------------------------------- |
| (அ) | உள்ளவாறான வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்த விட கூடுதலான பெறுமதியொன்றை எடுத்திருந்த 08 வருமான விடயங்களின் விலகல் 16 சதவீதம் முதல் 5796 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டதுடன் உள்ளவாறான வருமானம் | மதிப்பீடு தயாரிக்கும் போது முடியுமான வரை நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்க வேண்டும். | குறைபாடுகளை ஏற்றுக்கொள்கின்றேன் |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானத்தை விட குறைவாக இருந்த 08 வருமான விடயங்களுக்கு இடையே விலகல் 15 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சினை எடுத்திருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் போது வரியல்லாத வருமானத்தின் கீழ் மூலதனச் சொத்துக்கள் விற்பனையால் ரூபா 30,000,000 ஆன வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் அதிலிருந்து மூலம் எந்தவொரு வருமானத்தையும் பெற்றுக்கொள்ள மாகாண சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | 2017, 2018, 2019 ஆம் ஆண்டுகளில் ஆதனங்கள் கையளிப்பு அடிப்படையில் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,318,052 தொகை ரூபா 4,06,100 மற்றும் ரூபா 653,150 தொகை பதிவழிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 1990 இன் 17 ஆம் இலக்க நிதி சாசனத்தின் 79 மற்றும் 87 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நிலுவை வருமானத்திலிருந்து விடுவித்தல் மேற் கொள்ளப்பட்டுள்ளது. |
| (இ) | மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள 36 பிரதேச செயலகங்களில் நிலுவை காணி வருமானம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 18,231,381 ஆக காணப்பட்டது. | வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல | வரி அறவிடும் செயற்பாடுகள் ஆண்டு பூராகவும் இடம் பெறுவதாக அறிய தருகின்றேன். |
| (ஈ) | விவசாயத் திணைக்களததின் குண்டசாலை அரச பண்ணைக்குரிய காணியில் 1990 முதல் 2014 ஆம் ஆண்டு வரை 24 ஆண்டுகள் அரச மரக் கூட்டுத்தாபனம் பயன்படுத்திய மைக்காக பெறவேண்டிய வாடகையான ரூபா 13,200,000 தொகையை அறவிடுவதற்காக நடவடிக்கை | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலுவை வாடகையை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குண்டசாலை பிரதேச செலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | மத்திய மாகாண சபை கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து, முதலமைச்சருக்காக ஒதுக்கப்பட்டிருந்த அநகாரிகா தர்மபாலா மாவத்தையில் உள்ள மலபார் மாளிகை கட்டிடம் கிராம சக்தி செயற்திட்டத்திற்கு ஒப்படைக்கப்பட்டதுடன் உத்தியோக பூர்வ விடுதியை கையளிக்கும் உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் அரச விலை மதப்பீட்டாளரால் மதிப்பீடு செய்யபப்ட்ட ரூபா 325,000 ஆன மாத வாடகை அறவிடப்பட வேண்டிய போதும் 2019 மார்ச் 15 முதல் 2019 திசெம்பர் 22 வரையிலான காலப்பகுதியில் அறவிடப்பட வேண்டிய ரூபா 2,925,000 ஆன வீட்டு வாடகை வசூலிக்கப்படவில்லை. | அறவிடப்பட வேண்டிய வீட்டு வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |
| (ஊ) | உகுவெல பிரதேச செயலகப் பகுதியில் இளம் பௌத்த சங்கத்திற்கு நீண்ட கால அடிப்படையில் குத்தகைக்கு விடப்பட்ட நிலத்தின் குத்தகை காலம் 2017 பெப்ரவரியில் காலம் முடிவடைந்த போதும் அச்சொத்தை மீண்டும் குத்தகைக்கு விடவோ அல்லது உடன்படிக்கையை புதுப்பிக்கவோ அல்லது சொத்தின் உரித்தை கையேற்கவோ அல்லது பொருத்தமான எந்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | மீண்டும் குத்தகைக்கு விடவோ அல்லது உடன்படிக்கையை புதுப்பிக்கவோ அல்லது நடவடிக்கை எடுத்தல் | 2017 ஆம் ஆண்டில் குத்தகை காலம் முடிவடைந்துள்ளதுடன் மீண்டும் குத்தகைக்கு வழங்கம் செயற்பாடு இடம்பெற்று வருகின்றது. மதிப்பீட்டு அறிக்கை கிடைத்தவுடன் குத்தகை நீடிக்கப்படும் |
| (எ) | மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் புதிய | அரசாங்க கட்டிடங்களை வாடகைக்கு வழங்கும் போது | ஒப்பந்தம் புதுப்பிக்கப்படவில்லை |

| | | |
|---|---|---|
| கட்டிடத்தின் நில மாடியில் 1,900 சதுர அடி மற்றும் பள்ளேகல கோப்மார்ட் அமைந்துள்ள கட்டிடம் 2013 முதல் 2020 வரை மதிப்பீடு இல்லாமல் குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. மேலும் 683 சதுர அடி 03 நிறுவனங்களுக்கு ஒப்பந்தம் அல்லது வாடகை அறவீடு இல்லாமல் குத்தகைக்கு விடப்பட்டது. | மதிப்பீட்டைப் பெறுதல் மற்றும் நிகழ்காலத்திற்கு ஏற்றவாறு வாடகை வசூலிக்க நடவடிக்கை எடுத்தல் | என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அதை புதுப்பித்து, ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கியுள்ள காணிக்காக வாடகை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பேன் |

**3 நிதிசார் மீளாய்வு**

---------------------------

**3.1 நிதி விளைவுகள்**

-----------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக மாகாண சபை நிதியத்தின் ரூபா 32,476,105,845 பற்றாக்குறையாக இருந்ததுடன் இதற்கொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 28,974,672,234 ஆகும்.

04. **நியதிச்சட்ட கணக்குகள்/ நிதியக்கணக்குகள்/ வணிக முற்பணக் கணக்குகள் மற்றும் ஏனைய முற்பணக் கணக்குகள்**

4.1 **அதிகாரசபைக் கணக்குகள் / நிதியக் கணக்குகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| **4.1.1** | **மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை** | | |
| (அ) | மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வீதிகளை பராமரிப்பதற்காக மீளாய்வாண்டில் கிடைத்த | நிதிஏற்பாடுகளை குறித்த நோக்கங்களிற்கு பயன்படுத்தப்படல் | 2019 இன் Vat திருத்தத்தின் பின்னர் எஞ்சிய தொகையாகும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா.600,000,000 தொகையில் பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்த ரூபா.28,230,259 தொகை 2019 ஆம் ஆண்டின் செலவினமாக நிதிச் செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | வேண்டும் | |
| (ஆ) | பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.3.2(ஆ) பிரிவின் பிரகாரம் மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களுக்கு உபகாரப் படிகள் உரித்தற்ற போதும் தலைவர் மற்றும் அங்கத்தவர்களுக்காக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்குரிய உபகாரப் படிளாக ரூபா 725,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சுற்றறிகைகைகளை மிகைத்து செயற்படாதிருத்தல் | ஆளுனரின் அங்கீகாரத்துடன் வழங்கப்பட்டுள்ளன. |
| (இ) | நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) நிபந்தனைகளின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் உடன்படிக்கை செய்யப்பட்ட 56 கைத்தொழில்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய தாமத கட்டணங்களை விட ரூபா 1,797,310 குறைத்து அறவிடப்பட்டிருந்தது. | தாமதக் கட்டணங்கள் சரியாக அறவிடப்பட வேண்டும். | சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்கள் வடுறை தினமாகையால் அந்நாட்களுக்கு தாமதக் கட்டணம் அறவிடப்பட வில்லை. |
| (ஈ) | மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வீதிகளைப் பராமரிப்பதற்காக 2019 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்த ரூபா 600,000,000 தொகையில் ரூபா 50,625,682 சம்பளக் கொடுப்பனவிற்காக செலவிடப்பட்டிருந்தது. | நிதிஏற்பாடுகளை குறித்த நோக்கங்களிற்கு பயன்படுத்தப்படல் வேண்டும் | வீதிகளை பராமரிப்பதற்காக செக்ரோல் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்காக இதில் சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (உ) | 2019 ஆம் ஆண்டிற்காக வீதிகளை | மதிப்பீட்டு எல்லைகளை | 2017 ஆம் ஆண்டின் |

| | | |
|---|---|---|
| பராமரிப்பு இயந்திர வாடகை செலவின விடயத்திற்காக மதிப்பீட்டு அடிப்படையில் ரூபா 56,000,000 ஆக இருந்த போதும் ரூபா 84,227,163 செலவிடப்பட்டிருந்ததால் மதிப்பீட்டை விட செலவிடப்பட்ட அளவு ரூபா 28,277,163 ஆக இருந்தது. | பின்பற்றுதல் | கிடைக்க வேண்டிய இயந்திர வாடகை 32 மில்லியன் இவ்வாண்டில் பணாக அறவிடப்பட்டமை காரணமாக உள்ளது. |

**4.1.2 பிராந்திய பொருளதார அபிவிருத்தி நிறுவனம்**

---------------------------------------------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) கட்டுகித்துல பிரயாணிகள் சிற்றுண்டிச்சாலை குத்தகைக்கு வழங்கவது தொடர்பாக மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் பிராந்திய பொருளதார அபிவிருத்தி நிறுவனத்துடன் மேற்கொள்ளப் பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் உப குத்தகக்கு வழங்குதல் மற்றும் சிற்றுண்டிச்சாலையின் வடிவமைப்பை மாற்றுதல் மேற்கொள்ள முடியாத போதும் பிராந்திய பொருளதார அபிவிருத்தி நிறுவனம் அதனை வேறொரு தனியார் நிறுவனத்திற்கு உப குத்தகைக்கு வழங்கயிருந்ததுடன் அந்நிறுவனம் ரூபா 6 மில்லியனுக்கு மேற்பட்ட தொகையை செலவழித்து அதன் வடிவமைப்பையும் மாற்றியிருந்தது. 2013 பெப்ரவரி முதல் 2019 திசெம்பர் வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 2,164,390 ஆன நிலுவை குத்தகை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல். | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. |
| (ஆ) பிராந்திய பொருளதார அபிவிருத்தி | சாசனத்தின் பிரகாரம் | கருத்து தெரிவிக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனத்தின் சாசனத்தின் 4(9) பந்தியின் பிரகாரம் நிறுவகத்தின் நாளாந்த நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது அவற்றுக்கு தாக்கமளிக்கும் நிர்வாக மற்றும் நிதிப் பிரமாணங்களை தயாரிக்காமல் இருந்ததுடன் சாசனத்தின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் ஆட்சேர்ப்பு நடைமுறை கோவையும் தயாரிக்கப்பட்டு பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுத்தல் | வில்லை. |
| (இ) | பிராந்திய பொருளதார அபிவிருத்தி நிறுவனத்தின் நியதிச் சாசனத்தின் 6.3 ஆம் பிரிவின் பிரகாரம் மிகை நிதிக்காக மாகாண அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 55,000,000 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | சாசனத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. |
| (ஈ) | பிராந்திய பொருளதார அபிவிருத்தி நிறுவனம் நிறுவப்பட்ட நோக்கத்திற்குப் புறம்பாக நகர அலங்காரத்திற்காக பூச்சாடிகள் வழங்கியமைக்காக ரூபா 1,496,660 செலவிடப்பட்டிருந்தது. | நிறுவனம் நிறுவப்பட்ட நோக்கத்தினை அடைவதற்கு நடவடிக்கை எடுத்தல் | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. |

## 4.2 வர்த்தக முற்பணக் கணக்குகள்

### 4.2.1 ஹட்டன் வள நிலையத்தின் முற்பணக் கணக்கு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கல்வித் திணைக்களத்தின் சம்பளம் மற்றும் படிகளைப் பெற்று | வருடாந்த பற்றாக்குறையை | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | இந்நிறுவனத்தில் முழுநேர சேவையில் ஈடுபட்டுள்ள மூன்று உத்தியோகத்தர்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 2,044,319 ஆன ச்பளமம் அவ்வருமானச் செலவினக் கணக்கிற்கு சீராக்கியிருந்தால் மீளாய்வாண்டின் ரூபா 574,833 ஆன பற்றாக்குறை ரூபா 2,619,152 வரை அதிகரித்திருக்கும். | குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுத்தல். | |
| (ஆ) | மீளாய்வாண்டின் மொத்த வருமானமான ரூபா 1,214,128 இல் பாதுகாப்பு சேவைக் கட்டணங்கள் மற்றும் சுத்திகரிப்பு சேவைகள் கட்டணங்களிற்காக செலவிடப்பட்ட ரூபா 1,477,766 ஆன செலவினத்தையேனும் தீர்வுசெய்ய முடியாதிருந்தது. | செலவின கட்டுப்பாட்டிற்காக மாற்றும முறைமைகள் பின்பற்றப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. |
| (இ) | 2012 முதல் 2019 வரையான காலப்பகுதியில் இந்நிறுவனத்தின் வருமான பெறுவனவு 2012 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக அவ்வப்போது 27 சதவீதத்திலிருந்து 65 சதவீதம் வரை குறைவடைந்திருந்த போதும் முகாமைத்துவம் இதற்காக எவவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | செலவினங்களை குறைப்பதற்கும் வருமானத்தை அதிகரித்துக் கொள்ளவும் நடவடிக்கை எடுத்தல் | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. |

### 4.2.2 விவசாய உபகரணங்கள் பொருட்கள் முற்பணக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண விவசாயத் திணைக்களத்தின் மூலம் நடாத்தப்பட்டு வருகின்ற இவ் முற்பணக்கணக்கின் ஊடாக மத்திய மாகாணத்தின் விவசாயிகளுக்காக உயர் தரத்திலான விவசாய விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் கொள்வனவு செய்து | முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் நோக்த்தின் பிரகாரம் செயற்படல் | இன்றைக்கு பல வருடங்களுக்கு முன் ஒரு அமைச்சரவைப் பத்திரம் மூலம் உயர்ந்த பட்ச நிதி எல்லை ரூபா. 815,000 எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| வழங்குவதை நோக்காகக் கொண்டிருந்ததுடன் அதே அமைச்சின் கீழ் உள்ள மாகாண விவசாயத் திணைக்களத்தின் மூலம் அந் நடவடிக்கை தொடர்பாக ரூபா. 9,710,427 பெறுமதியான விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் 50 சதவீத பங்களிப்புடன் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. | | எனவே விவசாயிகளின் நடுகைப் பொருட்கள் தேவை இருந்த போதிலும் தீர்மானிக்கப்பட்ட உயர்ந்த பட்ச நிதித் எல்லையை மீறிச் செல்ல முடியாமலிருந்தது. |

### 4.2.3 கல்பாலம் பண்ணை முற்பணக் கணக்கு

**பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | விவசாயத் திணைக்களத்தின் மூலம் விவசாயத் தொழிலில் இரசாயனப் பசளைகளின் பாவணையை குறைத்தல் தொடர்பாக பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தியதால் பண்ணைப் பயிர்கள் தொடர்பாக 2012 ஆம் ஆண்டில் இரசாயனப் பசளைகள் பாவிக்கப்படாததுடன் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை இரசாயனப் பசளைகள் கொள்வனவு செய்தல் ரூபா. 61,750 தொடக்கம் ரூபா. 516,965 வரை வீழ்ச்சில் வளர்ச்சியடைந்துள்ளது. | இரசாயனப் பசளைகளின் பாவனையைக் குறைப்பதில் கவனம் செலுத்துதல். | தற்போது சந்தையில் காணப்படுவது கவர்ச்சியான கலப்பின விதைகளாகும். இவற்றுக்கான போசணைத் தேவை மிக அதிகமாகும். |
| (ஆ) | விவசாயப் பண்ணைக்குச் சொந்தமான முழு இடப் பரப்பு 23 ஏக்கர் ஆக இருப்பதுடன் அதில் முற்பணக் கணக்கு நடவடிக்கைகளுக்கான வருமானம் உழைத்தல் தொடர்பாக தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டிருந்த பயிர்ச்செய்கைக்கு உரிய காணி 14 ஏக்கரிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. | பயிர்ச் செய்கை செய்யக் கூடிய உயர்ந்த பட்ச நில அளவினைபயன்படுத்தப்பட்டு விவசாயப் பண்ணைகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | எதிர்காலத்தில் இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு நிலத்தின் வினைத்திறனை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | நுவரெலிய மாவட்டத்தில் வருடம் முழுவதும் பயிர்ச் செய்கை செய்ய முடியுமாக இருந்தாலும் கல்பாலம் | ஆண்டின் முழுவதும் பயிர்ச்செய்கை மேற்கொளளும் நிலத்னை | புதிதாக தொழிலாளர்களைப் பெற்றுத் தருமாறு கேட்டுக் கொண்டுள்ளதுடன் அதன்படி |

| | | |
|---|---|---|
| விவசாயப் பண்ணையில் வருடத்தில் ஒரு பருவத்தில் மாத்திரம் பயிரிடப்படுகிறது. பயிரிடப்படும் வளங்களில் 50 வீதமான அளவு மட்டுமே பயன்படுத்தப்படுவதால் வருடத்தின் ஏனைய காலங்களில் அவ் வளங்கள் செயலற்று இருந்தன. | உச்ச அளவில் பயன்படுத்த வேண்டும். | எதிர்காலத்தில் பயிர்ச் செய்கை செய்ய முடியுமான நிலப் பரப்பை முறையாக செயற்படுத்த நடவடிக்கை எடுப்பேன். |

### 4.2.4 மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் முசுகாதார திணைக்களத்தின் மருந்துகள் வழங்கல் முற்பணக் கணக்கு

---

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மருந்துகள் மதிப்பீடு முறையாக தயாரிக்கப்படாமையால் முன்னைய ஆண்டின் இறுதியில் இறுதித் தொகையாக ரூபா. 4,938,477 ஆகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் ரூபா. 5,277,523 பெறுமதியான மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன்படி மீளாய்வாண்டின் இறுதியில் மொத்த செலவீனத் தொகையில் 34 சதவீதமான ரூபா. 3,518,722 தொகை பயன்படுத்தப்படாது காணப்பட்டது. | வருடாந்த தேவைப்பாட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | மருந்துகள் கொள்வனவு செய்தல் தொடர்பாக ஆரம்பத்தில் 02 மாதங்கள் வரையான காலம் சென்றாலும் அக் காலத்தினுள் விலங்குகளுக்கு தொடர்ந்தும் சிகிச்சை செய்யப்பட வேண்டியதால் பாதுகாப்புத் தொகையொன்றை நடாத்திச் செல்லல் மிருக வைத்திய அலுவலக மட்டத்தில் செய்யப்படுகிறது. |
| (ஆ) பேராதனை மிருக வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு வரப்படுகின்ற விலங்குகளின் மருத்துவத் தேவை முற்றிலும் இம் முற்பணக் கணக்கு நடவடிக்கைகளின் மூலமாக நோக்கமாகக் காணப்பட்டாலும் முறையான சட்டபூர்வமான தன்மை இல்லாமையால் ஊழியர் நலன்புரி சங்கத்தின் மூலம் மிருக மருந்தகமொன்று நடாத்திச் செல்லல், இம் முற்பண நடவடிக்கைகள் தொடர்பாக பல வருடங்களாக நிதிஏற்பாடு எல்லை பயன்பாடு | முற்பணக் கணக்கின் நடவடிக்கைகளை நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு நிதி ஏற்பாட்டை பயன்படுத்த நடவடிக்கைப எடுத்தல் | மருந்துகள் பயன்பாடு குறித்து மிகவும் வெளிப்படையான மற்றும் முறையான திட்டமொன்றைத் தயாரித்தல் தொடர்பாக குறிப்புகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறியத் தருகிறேன். |

மானியக் கட்டுப்பாடுகளின் பயன்பாடு தொடர்ந்தும் பலவீனமான மட்டத்தில் இருப்பதற்குக் காரணமாக இருந்தது.

**4.3 ஏனைய முற்பணக் கணக்குகள்**

**மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண கல்வித் திணைக்களத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற 2894 உத்தியோகத்தர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 76,230,006 தொகையான கடன் மீதி மற்றும் இடமாற்றம் பெற்று வந்த 1059 உத்தியோகத்தர்களுக்கு தீர்வுசெய்ய வேண்டிய ரூபா 30,889,780 ஆன கடன் மீதி என்பன 2014 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தின் பாதீட்டுச் சுற்றிக்கையின் பிரகாரம் தீர்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் மற்றும் பழைய கடன் மீதிகளை அறவிடுதல் தொடர்பாக மாகாண திறைசேரிக்கு ஆலோசணையை பின்பற்ற நடவடிக்கை எடுத்தல் | காசோலைகள் மூலம் வலயங்களுக்கு இடையிலான இடமாற்றம் பெற்ற 49 உத்தியோகத்தர்களின் ரூபா 4,338,150 ஆன கடன மீதிகள் 2020 யூன் 30 ஆந் திகதி வரை தீர்வு செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய கடன் மீதகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | மாகாண கல்வித் திணைக்களத்தின் மொத்தமாக அறவிட வேண்டிய கடன் மீதிகளில் 1 ஆண்டு முதல் ஆண்டு முதல் 23 ஆண்டு வரை அறவிடப்படாத கடன் மீதியின் பெறுமதி ரூபா 67,740,684 ஆக இருந்தமையால் அது மொத்த கடன்பட்டோர் மீதியில் 89 சதவீதமாக இருந்ததுடன் தீர்வுசெய்ய வேண்டிய கடன் மீதியில் 1 ஆண்டு | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் பழைய கடன் மீதகள் தொடர்பாக மாகாண திறைசேரி அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட்ட நடவடிக்கை எடுத்தல். | காசோலைகள் மூலம் வலயங்களுக்கு இடையிலான இடமாற்றம் பெற்ற 49 உத்தியோகத்தர்களின் ரூபா 4,338,150 ஆன கடன மீதிகள் 2020 யூன் 30 ஆந் திகதி வரை தீர்வு செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய கடன் மீதகளை தீர்வு |

| | | | |
|---|---|---|---|
| | முதல் ஆண்டு முதல் 23 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக தீர்வுசெய்யப்படாதிருந்த கடன் மீதிகளின் பெறுமதி ரூபா 26,176,217 ஆக இருந்தது. அது மொத்த கடன் மீதியில் 89 சதவீதமாக இருந்தது. | | செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி வரையில் மரணித்த மற்றும் ஓய்வுபெற்ற 259 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 11,173,799 ஆன கடன் மீதியில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,694,649 ஆக இருந்தது. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் செயற்பட்டு கடன்களை அறவிடு வதற்கும் கடன் மீதிகளை தீர்வு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் | பல உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளைத் தீர்க்க ஓய்வூதியத் திணைக்களத் திடமிருந்து நிதி ஏற்பாடுகள் பெறப்பட்டுள்ளன, மேலும் ஒரு உத்தியோ கத்தரின் கடன் மீதியை மரண பணிக்கொடை யிலிருந்து அறவிடப்பட்டுள்ளது. ஏனைய உத்தியோகத்தர் களின் கடன் மீதியைத் தொகையை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (இ) | மாகாண கல்வித் திணைக்களத்தின் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் வேலையை விட்டுச்சென்ற 144 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 5,439,775 ஆக இருந்ததுடன் இதில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 3,392,787 ஆக இருந்தது. | அறவிப்படாத மீதிகள் தொடர்பாக முறையாக செயற்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஈ) | தனியால் மீதிகள் வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை மற்றும் திணைக்கள கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிக்கு இடையே வருடக் கணணக்காக காணப்படும் ரூபா 6,596,211 ஆன அவ்வேறுபாட்டில் வத்தேகம மற்றும் வலபனே அலுவலகங்களினல் | தவறான வரவு மற்றும் செலவுகள் தவறான சீராக்கங்கள் சீர் செய்யப்பட வேண்டும். | தவறாக மேற்கொள்ளப்பட்ட வரவுகள் எதிர் காலத்தில் சீர் செய்யப்படுமென அறிய தருகின்றேன். |

காணப்படும் முறையே ரூபா 5,815,894 மற்றும் ரூபா 1,652,050 ஆன போலியான வரவு பெறுமதி சீராக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 07 நிறுவனங்களின் கூடுதலான அறவீடு ரூபா 988,789 மற்றும் 02 வலயங்களில் ரூபா 117,055 மேலதிக கொடுப்பனவு என்பவற்றை சீராக்க மாகாண கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5. செயற்பாட்டு மீளாய்வு

### 5.1 செயலாற்றல்

#### 5.1.1 அரசின் மானியம்

| | மூலம் | அங்கீகரிக்கப்பட்ட தொகை | செலவிடப்பட்ட தொகை ரூபா மில்லியன் | குறைப்பயன்பாடு |
|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| (அ) | மாகாண திட்டவட்டமான மானியம் (PSDG) | 1,792.51 | 1,767.39 | 25.12 |
| (ஆ) | திட்டவட்டமான மானியம் (CBG) | 164.05 | 154.62 | 9.43 |
| (இ) | விசேட துறை அபிவிருத்தி செயற்திட்ட மானியம் (கல்வி) | 110.00 | 106.84 | 3.16 |
| (ஈ) | விசேட துறை அபிவிருத்தி செயற்திட்ட மானியம் (சுகாதாரம்) | 81.06 | 40.57 | 40.49 |
| | மொத்தம் | 2,147.62 | 2,069.42 | 78.20 |

### 5.1.2 மாகாண அபிவிருத்தித் திட்டம்

-----------------------------------------------

மீளாய்வாண்டிற்கான மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 2,147.62 மில்லியன் மதிப்பீட்டு பெறுமதியான 2504 புதிய வேலை மற்றும் நடைமுறை வேலைகளின் செயல்முன்னேற்றம் பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்படுகின்றது.

| | விபரம் | புதிய வேலை | தொடர் வேலை | மொத்த வேலைத் திட்டங்களின் எண்ணிக்கை | மொத்த வேலைத் திட்டங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி |
|---|---|---|---|---|---|
| | | | | | ரூபா மில்லியன் |
| **i.** | முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட | 2254 | 156 | 2410 | 1,831.80 |
| **ii.** | 50% ஐ விட குறைவாக பூர்த்தி செய்யப்பட்ட | 32 | 6 | 38 | 301.48 |
| **iii.** | 50% இற்கு மேல் பூர்த்தி செய்யப்பட்ட | 38 | 11 | 49 | 287.70 |
| **iv.** | ஆரம்பிக்கப்படாத | 6 | 1 | 7 | - |
| | மொத்தம் | 2330 | 174 | 2504 | 2,420.98 |

மீளாய்வாண்டிற்கான நாளதுவரையாக்கப்பட்ட ஒழுங்கமைப்பு வரைபடம், அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியனர், பாதீட்டு முன்னுரிமை, செயறபடுத்தப்பட்ட காலச் சட்டகம், வெசயற்பாடுகளின் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் பெறுபேறுகள் வருடாந்த கட்டுநிதி தேவைப்பாட்டுத் திட்டம் என்பவற்றை உள்ளடக்கிய வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒவ்வொரு தலைப்பிற்கும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

-----------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1991 இலிருந்து 2013 வரை 08 சந்தர்ப்பங்களில் கூட்டுறவு நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட ரூபா. 1,025,000 கடன் தொகை அறவிடப்படாதிருந்ததுடன் 02 | கடனை மீளச் செலுத்தத் தவறும் பட்சத்தில் ஒப்பந்தத்தின் பிரகாரம் செயற்படல் | கடனை அறவிடுவதில் ஒரு சிக்கல் உள்ளது. கலைத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா. 2,080,500 கடன் தொகை அறவிடப்படுவதில் மந்த நிலை காணப்பட்டது. | | வருகின்ற சங்கங்களின் கலைத்தல் நிதியிலிருந்து அறவிடுவதற்கும் கலைக்கப்பட்டுள்ள 5 சங்கங்களின் கடன்களை நீக்கிவிடுவதற்கான அனுமதியைப் பெறவும் நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | கூட்டுறவு ஆணைக்குழுவின் பிரமாணங்களுக்கு முறனாக ஆளணியினர் நியமிக்கப்படல் மற்றும் 60 வயதிற்கு மேற்பட்ட ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக ஆணைக்குழு நியமங்களை வழங்கியிருந்த போதும் அவற்றை செயற்படுத்தாமை தொடர்பில் கூட்டுறவு சேவைகள் ஆணைக்குழுவினால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நியமங்களை செயற்படுத்தாத பட்சத்தில் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்தல் | மீண்டும் சங்கங்களுக்கான அறிவுறுத்தல்களை வழங்கி சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கிறேன். |
| (இ) | மாணவர்கள் குறைவடைந்தமை காரணமாக 2001 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் நாஉல வலயக் கல்விப் பணிமனைக்கு உரித்தான 08 பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. | குறித்த பாடசாலைகளில் கடமை புரிந்த ஆசிரியர்களை வேறு பாடசாலைகளில் சேவைக்காக இணைத்தல் மற்றும் சொத்துக்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஈ)(i) | கண்டி மாவட்டத்தின் 05 பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள | மின் உற்பத்தி நிலையங்களினால் | அரசின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் வரி |

| | | | |
|---|---|---|---|
| | 13 சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து 2019ஆம் ஆண்டு நீர் வரியாக ரூபா. 2,290,794 அறவிடப்பட்டிருந்ததுடன் குறித்த நிறுவனங்கள் அவ்வாண்டினுள் உற்பத்தி செய்யப்பட்ட 54,782,382 கிலோவாட் மின்சாரத்தின் மூலம் ரூபா. 848,269,441 தொகையை வருமானமாக ஈட்டியிருந்தன. நீர் வரி அறவிடல் தொடர்பான சட்டங்கள் அண்மையில் திருத்தியமைக்கப்படாமை காரணமாக ஈட்டப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடுகையில் அறவிடப்பட்டிருந்த வரி 0.27 வீதமாகக் காணப்பட்டது. | உற்பத்தி செய்யப்படுகின்ற மின் கூறுகளின் எண்ணிக்கைக்கேற்ப வரி அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல். | திருத்தம் தொடர்பான 2010/02 சுற்றறிக்கை மற்றும் மாகாண காணி ஆணையாளரின் CLP/LC/LD/6/AP/1/2/3 மற்றும் 2020 ஜனவரி 13 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | பிரதேச செயலகத்தினுள் ஆவணப்படுத்தப்பட்டாதிருந்த 04 சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்கள் 2019 ஜனவரி தொடக்கம் திசெம்பர் வரையிலான காலப்பகுதியில் 8,430,932 கிலோவாட் மின்சாரத்தினை உற்பத்தி செய்து ரூபா. 118,033,048 வருமானத்தை ஈட்டியிருந்த போதும் உடபலாத்த பிரதேச செயலகத்திற்கு எந்தவித வரியும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிலுவை வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் பிரதேச செயலகத்தினுள் மின் உற்பத்தி நிலைய ஆவணங்கள் பேணப்படல் வேண்டும். | ஒரு மின் நிலையத்திற்கு மகாவலி அதிகார சபையின் மூலம் வரி அறவிடப்படல் வேண்டும். மற்றுமொரு நிலையத்திற்கான வரி அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், ஒரு நிறுவனத்தின் மூலம் 500Kw ஒரு மின் நிலையம் மாத்திரம் நடாத்தப்பட்டு வருவதாகவும் கண்காணிப்பு அறிக்கை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் பின்னர் மற்றைய நிலையத்திடமிருந்து வரி |

| | | | |
|---|---|---|---|
| | | | அறவிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |
| (உ)(i) | ஊடபலாத்த, பன்வில மற்றும் மெததும்பர ஆகிய பிரதேச செயலகங்களுக்குட்பட்ட 04 பாடசாலைக் காணிகளை கையேற்பதற்காக 2011 ஆகஸ்ட் முதல் 2019 ஜுன் வரையிலான காலப்பகுதியினுள் ரூபா. 2,187,455 கிடைக்கப்பெற்றிருந்த போதும், 2020 ஜனவரி வரையிலும் குறித்த காணிகள் கையேற்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த காணிகளை கையளிப்பதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உடபலாத்த பாடசாலைகள் 02இன் காணிகளை கையேற்பதற்கான உத்தரவு காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைச்சு அமைச்சின் மூலம் கிடைத்தல் வேண்டும். பன்வில பிரதேச செயலகத்தின் குறித்த காணி நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குரியது எனக் கண்டறியப்பட்டுள்ளது. மெததும்பர பிரதேச செயலகம் காணி அமைச்சுக்கு கையேற்றல் தொடர்பான முன்மொழிவினை சமர்ப்பித்துள்ளது. |
| (ii) | மத்திய மாகாண காணி திணைக்களம் 12 பிரதேச செயலகங்களுக்குரிய 17 பாடசாலைகளின் காணிகளை கையேற்பதற்காக ரூபா. 14,616,574 தொகையை செலுத்தி 1 தொடக்கம் 5 வருடங்களுக்கிடையிலான காலம் கடந்திருந்த போதும் அச் செயற்பாடு முடிவடைந்திருக்கவில்லை. | கலந்தாலோசித்து இச் செயற்பாட்டினை முறைப்படுத்திக் கொள்வதற்கு முடியுமான ஒரு செயன்முறையை ஏற்படுத்திக் கொள்ளல். | பணத்தை வைப்புச் செய்வதற்கு முதலில் கையேற்றல் முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு சட்டத்தின் அடிப்படையில் விதிமுறைகள் இல்லை. |
| (iii) | 37 பாடசாலைகளின் கையேற்கப்பட வேண்டிய காணிகளின் பெறுமதி | குறித்த பிரிவினருக்கு அறிவித்து மிக | நிதி பெற்றுக்கொள்வதற்கும் பெறப்பட்ட நிதியை ஒரே |

| | | | |
|---|---|---|---|
| | 197,375,000 என மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் நிதி பற்றாக்குறை காரணமாக கையேற்பதற்கான அடுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டிருக்கவில்லை. | அவசரமாக நிதி ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தடவையில் செலுத்தி கையேற்க முடியுமான பாடசாலைக் காணிகளுக்கு முன்னுரிமை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஊ) | 03 மாவட்டங்களையும் சேர்ந்த 36 பிரதேச செயலகங்களின் காணிகளை நீண்டகால வாடகைக்கு விடல் சம்பந்தமான 3,220 கோவைகள் தொடர்பான வேலைகள் நாளதுவரையாக்கல் செய்யப்படாததன் காரணமாக வாடகைக் காலம் முடிவடைந்த கோவைகளின் அடுத்த செயற்பாடுகள் மேற்கொள்ளப் படாததால் சட்ட விரோதமான முறையில் அரசாங்கக் காணிகளை பயன்படுத்துவதற்கு இடமளிக்கப் பட்டிருந்ததுடன் 05 பிரதேச செயலகங்களுக்குச் சொந்தமான 81 காணிகளில் சட்ட விரோத குடியிருப்பாளர் களை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கோவைகளை நாலதுவரையாக்கல் செய்து நிலுவை வாடகையை அறவிடல் மற்றும் சட்ட விரோத குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுத்தல். | பழைய நீண்டகால வரி கோவைகளின் நடவடிக்கைகள் நாலதுவரையாக்கல் செய்யப்படவில்லை என்பதை ஏற்றுக் கொள்கிறேன். |
| (எ) | பிரதேச செயலகங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான 30 காணிகளின் சட்டரீதியான உரிமையினை உறுதி செய்ய முடியாதிருந்ததன் காரணமாக அவற்றைப் பயன்படுத்துகின்ற அரச நிறுவனங்களுக்கு | சட்டரீதியான உரிமையினை உறுதி செய்துகொள்வதற்கான நடவடிக்கையை விரைவில் எடுத்தல் | தற்பொழுது கிராம அதிகாரி பிரிவின் அடிப்படையில் தரவுகள் திரட்டப்படுகின்ற அதே வேளை கையேற்பு நடவடிக்கைகளின் போது மதிப்பீட்டு, அளவைகள் திணைக்களங்கள் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | கையளிக்க முடியாதிருந்தது. | | காணி அமைச்சு ஆகிய நிறுவனங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தும் பொழுது தாமதங்கள் ஏற்படுகின்றன. |

## 5.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

---

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நாவலப்பிட்டிய புனித சென்ட் அன்ரு மகளிர் கல்லூரியில் 2005 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டிடத்தின் முதலாம் மாடியை நிர்மாணித்து சுமார் 14 வருடங்கள் கடந்திருந்த போதும் அதன் இரண்டாவது மாடி நிர்மாணிக்கப்படாததன் காரணமாக மழை காலங்களில் வகுப்பறைகளுக்குள் நீர் உட்புகும் நிலை ஏற்பட்டுள்ளதால் அக் கட்டடத்தில் கல்வி பயிலும் மாணவியர் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். | பல மாடிகளைக் கொண்ட கட்டிடங்களை கட்டம் கட்டமாக நிர்மாணிக்கும் பொழுது கால தாமதமின்றி நிறைவு செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல். | கண்டி மாவட்ட பொறியியலாளர் மூலமாக விலை மனு கோரப்பட்டு கூரையை அமைப்பதற்கான நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகிளேன். |
| (ஆ) | ரஜதலாவ கனிஷ்ட வித்தியாலயத்தின் குழாய்க் கிணற்றுக்கு பொருத்தப்பட்ட நீர் இயந்திரத்தினை திருத்தம் செய்யாமை மற்றும் | நியமங்களை செயற்படுத்தாத பட்சத்தில் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்தல் | மீண்டும் சங்கங்களுக்கான அறிவுறுத்தல்களை வழங்கி சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | தரம் 1 முதல் 5 வரை 990 மாணவர்கள் கல்வி பயிலும் ஹங்குரன்கெத மத்திய கல்லூரியின் 03 கட்டிடங்கள் புகையிலை நிறுவனம் ஒன்றினால் புகையிலை காய விடுவதற்காகப் பயன்படுத்தி இருந்த, தகரக் கூரையைக் கொண்ட, கதவுகள் முறையாக இல்லாத, உயரம் குறைந்த கட்டங்களாக இருந்ததன் காரணமாக மாணவர்கள் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் கல்வி கற்பதில் ஈடுபட்டிருந்தனர். | குறைந்தபட்ச பௌதீக வளங்களையாவது வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |
| (ஈ) | விவசாயத் திணைக்களத்தின் மூலம் தேசிய உணவுகள் விளம்பர வேலைத்திட்டம் - 2016 இன் கீழ் மாத்தளை மாவட்டத்தின் மாத்தளை, கிபிஸ்ஸ மற்றும் நாலந்த விவசாய உதவியாளர் பிரிவுகளில் 03 தேசிய உணவகங்கள் (ஹெல பொஜுன்) நிர்மாணிப்பதற்காக ரூபா 11,866,202 செலவிடப் பட்டிருந்த போதும் விற்பனை நடவடிக்கைகளுக்காக 2018ஆம் ஆண்டு முதல் தேர்ந்தெடுக் கப்பட்ட விற்பனையாளர்களுடன் முறையான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படாததன் காரணமாக கட்டணமொன்று அறவிடப்பட முடியாமல் இருந்தது. | வெளி நபர்களுக்கு அரசாங்க சொத்துக்களை வழங்கும் போது சட்டரீதியான ஒரு ஒழுங்கு காணப்பட வேண்டியுள்ளதுடன் அரசாங்கத்திற்கு சாதகமான முறையில் வருமானத்தைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல். | திணைக்களம் மற்றும் விற்பனையாளர்களுக்கிடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கான நடவடிக்கை எடுப்பேன். |
| (உ) | 2019 ஆம் ஆண்டுக்கான செயல் நடவடிக்கைத் | திணைக்கள கால்நடை | 2019 ஆம் ஆண்டினுள் 53,128 செயற்கை |

| | | | |
|---|---|---|---|
| | திட்டத்திற்கமைவாக விவசாயத் திணைக்களத்தின் மூலம் ரூபா 2.8 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 63,150 செயற்கை சினைப்படுத்தல்களை மேற் கொள்ளத் தீர்மானிக்கப் பட்டிருந்த போதும், ரூபா. 2.33 மில்லியன் செலவில் 53,128 சினைப்படுத்தல்கள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், கருப் பரிசோதனைகள் மற்றும் பிரசவப் பரிசோதனைகள் முறையே 13,000 மற்றும் 14,345 முறைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. இதனடிப்படையில் கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் செயற்கை சினைப் படுத்தல் உத்தியோகத்தர் களினால் மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்ட செயற்கை சினைப்படுத்தல்களின் கருப் பரிசோதனைகள் மற்றும் பிரசவப் பரிசோதனைகளின் முன்னேற்றம் 24 தொடக்கம் 27 வரையிலான குறைந்த வீதமாகக் காணப்பட்டது. | அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் செயற்கை சினைப்படுத்தல் செயற்பாட்டில் செலுத்துகின்ற பங்களிப்பினை அதிகரிப்பதற்கான வழிமுறைகளை மேற்கொள்வதன் மூலம் அதன் செயலாற்றலை அதிகரித்தல், பின்னூட்டல் செயற்பாட்டினை அதிகரித்தல் மற்றும் விவசாயிகளை அறிவூட்டல் தொடர்பான உள்ளக வேலைத் திட்டமொன்றை ஏற்படுத்தல். | சினைப்படுத்தல்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளதுடன் இலங்கையில் காணப்படும் தரவுகளுக்கமைய இதன் வெற்றி 1/3 ஆக இருப்பதனால் மேற்குறிப்பிட்ட கருவூட்டலகளில் கருவடையும் என எதிர்பார்க்கக்கூடிய விலங்குகளின் எண்ணிக்கை சுமார் 17,709 ஆகும். இவ் விலங்குகள் 17,709 உம் ஈன்ற குட்டிகளில் 14,345 அதாவது 81% பிறப்புகளை பதிவு செய்ய முடியுமாகியுள்ளது. கருப் பரிசோதனைகளுக்காக 27,170 எனும் வருடாந்த இலக்கு வழங்கப்பட்டுள்ள துடன் இதில் 13,000 அதாவது 48 வீதத்தினை அடைந்து கொள்ள முடியுமாக இருந்தது. |
| (ஊ) | மத்திய மாகாண பொறியியலாளர் சேவைகள் திணைக்களத்தில் அமைந்திருந்த தரக் கட்டுப்பாட்டு பரிசோதனைக் கூடம் 2008 ஆம் ஆண்டு கொள்வனவு செய்திருந்த ரூபா. 2,702,500 பெறுமதியான 03 தரப் பரிசோதனை உபகரணங்கள் எந்தவிதப் பரிசோதனை | உத்தியோகத்தர் களைப் பயிற்றுவித்து உபகரணங்களின் மூலம் பயன் பெறல் | சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் காணப்படாமை மற்றும் நிதி ஒதுக்கப்படாமை ஆகிய காரணங்களால் உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிக்க முடியாமையினால் இவ்வுபகரணங்களைப் பயன்படுத்த முடியாமல் |

| | | | |
|---|---|---|---|
| | களுக்காகவும் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. | | போனது. |
| (எ) | மத்திய மாகாண பொறியியலாளர் சேவைகள் திணைக்களத்தின் கட்டட விஞ்ஞானப் பிரிவிற்கு 2016 தொடக்கம் 2018 வரை கிடைக்கப்பெற்றிருந்த தரக் கட்டுப்பாட்டுப் பரிசோதனை விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை அடிப்படையில் செயலாற்றல் 31 வீதம் தொடக்கம் 44 வீதமாகிய குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது. | செயலாற்றலை அதிகரிப்பதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்களுக்கேற்ப நிதி கிடைக்காமை காரணமாக செல்லுபடியற்றதாகுதல் மற்றும் வருட இறுதியில் கிடைக்கும் விண்ணப்பங்கள் அடுத்த வருடத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. |
| (ஏ) | மாத்தளை மாவட்டத்திற்குச் சொந்தமான 03 பிரதேச செயலகங்களுக்கு ஒவ்வொரு தபால் நிலையங்களிலிருந்தும் அனுப்பப்பட்ட ரூபா. 773,800 செலுத்தப்படாத பொதுக் கொடுப்பனவு மற்றும் நோயாளர் கொடுப்பனவு தொடர்பாக பின்னூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தபால் நிலையப் பொறுப்பதிகாரிகளிடம் தகவல் அறிந்து பின்னூட்டல் நடவடிக்கை மேற்கொள்ளல். | பொதுக் கொடுப்பனவு மற்றும் நோயாளர் கொடுப்பனவு வழங்கப்பட்டதன் பின்னர் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் காரியாலயத்திற்குக் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதன் காரணமாக உதவித்தொகை கிடைக்காதவர்களை இனங்காண முடியாமல் போகின்றது. |
| (ஐ) | மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தில் பதிவு செய்த 1,555 கூட்டுறவு சங்கங்களில் 781 சங்கங்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் மாகாண கூட்டுறவுத் திணைக்களம் | புதிய சங்கங்களைப் பதிவு செய்யும் போது இது தொடர்பாக கவனம் செலுத்துதல் | பல்வேறு நிகழ்ச்சிகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் நிகழ்ச்சியின் இறுதியில் செயலிழந்துள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டில் 655 கணக்காய்வுகளை மேற்கொள்வதற்குத் திட்டமிட்டிருந்த போதும் வருட இறுதியில் 478 மாத்திரமே நிறைவு செய்யப்பட்டிருந்தன. | | |
| (ஒ) | கண்டி மாவட்ட அலுவலகத்தில் பதிவினை இரத்துச் செய்து 6 முதல் 27 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதும் கலைத்தல் செயற்பாடுகள் நிறைவு பெறாத சங்கங்களின் எண்ணிக்கை 36ஆக இருந்ததுடன் கலைத்தலுக்கான உரித்துரிமையினைப் பெறுவதற்காக விளம்பரம் செய்து 03 வருடங்களைக் கடந்திருந்த போதும் கலைப்பாளர்களை நியமித்திருக்காத சங்கங்களின் எண்ணிக்கை 47 ஆகவிருந்தது. அதேபோன்று 96 சங்கங்களின் பதிவினை இரத்துச் செய்ததாக 2018 ஜுலை 09 ஆம் திகதி விளம்பரப்படுத்தப்பட்டிருந்த போதும் உரித்துரிமை பெறுவதற்கான அறிவித்தல் விடுக்கப்பட்டிருக்கவில்லை. | சங்கங்களின் கலைத்தல் நடவடிக்கைகளை தாமதமின்றி நிறைவு செய்தல். | உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காணப்பட்டமை கலைத்தல் நடவடிக்கைகள் தாமதமடைவதற்குக் காரணமாக உள்ளதுடன் உரித்துரிமை பெறுவதற்கான அறிவித்தல் விடுக்கப்படுவதற்கு 2019.10.14 ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஓ) | கண்டி மாவட்டத்தன் தீர்ப்பாளர் செயற்பாடுகள் முடிவடையாத 1,253 சிக்கல்களின் எண்ணிக்கை ஆக இருந்த போதிலும் தீர்ப்பாளர் நடவடிக்கைகளுக்காக தகைமையுடைய 58 உத்தியோகத்தர்களில் 13 உத்தியோகத்தர்கள் தீர்ப்பாளர் செயற்பாடுகளுக்காக தொடர்பு | தகைமையுடைய உத்தியோகத்தர்கள் அனைவரையும் ஈடுபடுத்தக்கூடிய வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு தீர்வுகளை பூர்த்தி செய்தல் | தகைமையான உத்தியோகத்தர்கள் இருந்த போதும் சில உத்தியோகத்தர்களுக்கு காலத்தை செலவிடுவதற்கு முடியாத சந்தர்ப்பங்களில் தீர்வு பரிசோதனைகளில் ஈடுபடுவதிலலை. |

படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மத்திய மாகாண கலாச்சாரத் திணைக்களத்திற்குச் சொந்தமான ஒரு சொத்தாகிய அரச நடனக் குழுவிற்காக 2019ஆம் ஆண்டு ரூபா. 3,400,000 நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. நடனக் குழுவை வெளி நிகழ்ச்சிகளுக்கு வழங்குவதற்காக பெறப்படும் கட்டணங்களை கணக்கிடுவது கட்டாயமானதாக இருந்த போதும் 2019ஆம் ஆண்டு வாடகைக்காக வழங்கப்பட்டிருந்த 35 சந்தர்ப்பங்களில் 11 சந்தர்ப்பங்களுக்காகப் பெறப்பட்ட கட்டணங்களின் கூட்டுத்தொகை ரூபா. 326,975 மாத்திரம் கணக்கிடப்பட்டிருந்தது. | வெளிப் பிரிவினருக்கான சேவைகள் வழங்கப்படும் போது அரசாங்கத்திற்கான வருமானம் கிடைக்க வேண்டியதுடன் சகல பெறுவனவுகளையும் கணக்கிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல். | எதிர்காலத்தில் பெறப்படும் வருமானத்தில் ஒரு சதவீதத்தை அரச வருமானத்திற்கு வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | தம்புள்ளை பொது வைத்தியசாலையில் 2019ஆம் ஆண்டு அவசர சிகிச்சைப் பிரிவில் பேணப்பட்டு வந்த ஆவணங்களின் அடிப்படையில் 2019 ஜனவரி முதல் 2019 ஜுன் 12ஆம் திகதி வரை விசர் | சுகாதார மற்றும் உள்நாட்டு மருத்துவ அமைச்சின் அறிவுறுத்தல் இணங்க செயற்படல். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

நாய்க் கடி நோயினைத் தடுப்பதற்கான ஊசிமருந்து வழங்கப்பட்டிருந்த 45 வெளிநாட்டு நோயாளிகளில் 28 நோயாளிகளிடம் வைத்தியசாலை மருத்துவ மற்றும் சேவைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 5.5 நிதியக் குறை பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபைக்குச் சொந்தமான 06 நடைமுறைக் கணக்குகள் மற்றும் பிரதான செயலகத்தின் 02 பிரதான நடைமுறைக் கணக்குகள் அடங்கலாக 08 கணக்குகளில் 2019 ஆம் ஆண்டு ரூபா. 1,857,991,945 பயன்படுத்தப்படாது இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் 02 அரச வங்கிகளில் பேணப்பட்டு வந்துள்ள ரூபா. 2,481,656,658 ஆகவிருந்த நிலையான வைப்புகள் மாகாண சபையின் நோக்கங்களை அடைந்து கொள்ளும் வகையில் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய தொகைகளை தாமதமின்றி செலுத்த நடவடிக்கை எடுத்தல். | நிலையான வைப்புக்களில் வைப்புச் செய்யப்பட்டிருப்பது மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி நிறுவனங்களின் சொத்துக்களை கையளித்தல் தொடர்பாக கிடைக்கப் பெறுகின்ற முத்திரைக் கட்டணங்களாகும். இவை மத்திய மாகாண திறைசேரிக்குக் கிடைக்கப் பெறுவதுடன் பதிவாளர் திணைக்களத்தின் அறிக்கையிடலின் பின்னர் குறித்த உள்ளூராட்சி நிறுவனத்திற்கு விடுவிக்கப்பட வேண்டி இருப்பதனால் அத் தொகையில் ஒரு பகுதி நிலையான வைப்பில் இடப்பட்டுள்ளது. |

**5.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாணக் கல்வித் திணைக்களத்தில் மேலும் அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா. 19,366,866 பெறுமதியான 198 சேத நட்டச் சம்பவங்கள் காணப்பட்டதுடன் இதில் ரூபா. 6,822,609 பெறுமதியான 56 சம்பவங்கள் 5 முதல் 10 வருடங்களுக்கு உட்பட்டவையாக இருந்ததுடன் ரூபா. 3,342,620 பெறுமதியான 45 சம்பவங்கள் 10 வருடங்களுக்கு மேற்பட்ட சம்பவங்களாக இருந்தன. நீண்ட காலமாக காணப்பட்டு வருகின்ற இந்த சேத நட்டங்களை அறவிடுவதற்கு அல்லது நீக்கி விடுவதற்கு மாகாண நிதி பிரமாணங்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்கள் மற்றும் மாகாண நிதிப் பிரமாணங்களின் அடிப்படையில் அறவிடுவதற்கு அல்லது நீக்கி விடுவதற்கு நடவடிக்கை எடுத்தல். | நிதிப் பிரமாணம் 104(4) பரிசோதனை மற்றும் மிகை அறவீடு அறவிடல் நிறைவு பெறவில்லை. |
| (ஆ) | 4 வருடங்களுக்கும் 11 வருடங்களுக்கும் முன்னர் விபத்துக்குள்ளாகியிருந்த மாகாண விவசாய திணைக்களத்திற்குச் சொந்தமான 02 வாகனங்களின் பரிசோதனை நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரை முடிவடையாதிருந்ததுடன் தல்பிடிய விவசாய ஆலோசகர் காரியாலயம், போவல பிரதி | நட்டம் மற்றும் சேதங்கள் தொடர்பான நிதிப் பிரமாணம் 104 பரிசோதனையை கால தாமதமின்றி நிறைவு செய்து அறிக்கையின் அடிப்படையில் செயற்படுவதற்கான நடவடிக்கை | ஒரு சேதம் தொடர்பில் காப்புறுதி மூலமாக மீள் நிரப்பல் செய்யப்பட்டுள்ளதுடன் நட்டம் மற்றும் சேதங்கள் பரிசோதனைகள் நிறைவு பெறவில்லை. அதனால் தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய தொகை புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| விவசாய பணிப்பாளர் காரியாலயம் மற்றும் குண்டசாலை கால்நடை வைத்திய காரியாலயம் ஆகியவற்றின் கூட்டுத்தொகை ரூபா. 1,332,257 ஆகிய நட்டம் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுத்தல். | மற்றைய வாகனத்தின் குறித்த தொகையை செலுத்துமாறு ஊழியருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஒழுக்காற்று தீர்மாணத்திற்கு எதிராக ஊழியர் அரச சேவைகள் ஆணைக்குழுவில் மேன்முறையீடு செய்துள்ளார். |

**5.7 ஒப்பந்த நிருவாகத்தின் குறைபாடுகள்.**

--------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ---------------------------------------- | ----------------------- | ---------------------------- |
| தெல்தெனிய மாவட்ட ஆதார வைத்தியசாலையில் 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் ரூபா. 370 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய நோயாளர் பராமரிப்புக் கட்டடத் தொகுதியில் நீர் ஒழுகுதல் மற்றும் மலக் கழிவுக் குழாய்த் தொகுதியில் குறைபாடுகள் காணப்பட்டதுடன் விராந்தைகளில் விழுகின்ற மழை நீர் கொங்ரீட் வழியாக கீழ் நோக்கி வழிவதைத் தடுப்பதற்காக ரூபா. 2,854,274 செலவில் அமானோ தகட்டினால் ஆன இரண்டு கூரைகள் பொருத்தப்பட்டிருந்தன. | தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்களினால் பரீட்சிக்கப்பட்டு மேலும் உறுதிப்படுத்திய பின்னர் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்தல். | நிலையான வைப்புகளில் வைப்புச் செய்யப்பட்டிருப்பது மத்திய மாகாண சபையின் கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 5.8 செயற்திட்டங்களை செயற்படுத்தல்

---

### 5.8.1 தாமதமாகிய திட்டங்கள்

---

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நுவரெலியா பயிற்சி நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா. 109,334,000 மற்றும் ரூபா. 50,000,000 ஒதுக்கப்பட்டிருந்ததுடன் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் முறையே ரூபா. 600,000 மற்றும் ரூபா. 206,874 ஆகவிருந்தது. இத் திட்டம் திட்டமிட்டவாறு நிறைவேற்றப்படாததன் காரணமாக பழைய கட்டடத்தையும் பயன்படுத்த முடியாது போயிருந்தது. பழைய கட்டடத்தை புனர் நிர்மாணம் செய்வதற்காக மீளாய்வாண்டில் ரூபா. 1,000,000 நிதி ஒதுக்கப்பட்டு அதில் ரூபா. 118,573 செலவிடப்பட்டிருந்ததுடன் இது வரையில் அதுவும் பயன்பாடற்ற செலவாக மாறியுள்ளது. | திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு முன்னர் காணியை கையேற்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல். | இங்கு காணியை கையளித்தல் நடைபெறவில்லை. காணியை கையளிப்பதில் உள்ள தாமதம் காரணமாக அடுத்த நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. அத்தியாவசிய புனர் நிர்மாண வேலைகளுக்காக நிதி செலவிடப்பட்டுள்ளதன் காரணமாக அது பலனற்ற செலவொன்றல்ல. |
| (ஆ) | கட்டம்பே உல்லாசப் பயணிகள் மற்றும் தொழில் முன்னேற்ற மத்திய நிலயத்தினை நிர்மாணிப்பதற்காக 2017 மற்றும் 2018 ஆகிய வருடங்களில் எதிர்பார்க்கை மதிப்பீட்டின் | ஆரம்ப ஆய்வொன்றின் மூலம் திட்டம் தயாரிக்கப்பட்டதன் பின்னர் நிதி ஒதுக்குவதற்கான | Design & build பெறுகை செயன்முறையின் கீழ் ஒப்பந்தக்காரர் ஒருவரைத் தெரிவுசெய்வதற்காக மூன்று முறை |

| | | |
|---|---|---|
| மூலம் முறையே ரூபா. 900,000,000 மற்றும் ரூபா. 65,000,000 ஒதுக்கப்பட்டிருந்த துடன், பத்திரிகை விளம்பரத்திற்காக 2017 ஆம் ஆண்டு 2 சந்தர்ப்பங்களில் ரூபா. 208,610 மற்றும் 2018 ஆம் ஆண்டு 176,194 செலவிடப்பட்டிருந்தது. அதனடிப்படையில், 2017, 2018 ஆகிய இரண்டு வருடங்களிலும் பத்திரிகை விளம்பரத்திற்காக மாத்திரம் செலவிடப்பட்டிருந்த அதேவேளை இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | ஏற்பாடு செய்தல். | பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்ட போதும் தகைமை வாய்ந்த ஒப்பந்தக்காரர் ஒருவரை தேர்ந்தெடுக்க முடியாது போனது. |

**5.8.2 நோக்கத்திலிருந்து விலகிய செயற்பாடுகள்**

---------------------------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண நிலையான அபிவிருத்தி ஒதுக்கீடு – 2018 விசேட பொருளாதார அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் வில்கமுவ பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் வசிக்கும் 103 சிறுநீரக நோயாளிகளுக்கு 500 லீற்றர் நீர்த் தாங்கிகளை வழங்குவதற்காக ரூபா. 478,900 செலவிடப்பட்டு 103 நீர்த்தாங்கிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும், | உதவிகள் ஒதுக்கப்பட்ட நோக்கங்களுக்கு அமைவாக இருத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் நடைபெறாதிருப்பதற்கான நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| | அவை தேர்ந்தெடுக்கப்பட்ட உதவி பெறுவோருக்கு வழங்கப்படாது பிரதேச சபை உறுப்பினர்களால் பிரதேசத்தின் அரண உதவிச் சங்கம் மற்றும் வேறு நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | நன்னீர் மீன்வளப் பிரிவின் மூலம் 2015 முதல் 2019 வரையிலான வருடங்களில் கூட்டுத்தொகை ரூபா. 16,602,950 பெறுமதியான 10,038,565 மீன் குஞ்சுகள் மத்திய மாகாணத்தினுள் காணப்பட்ட 12 தொடக்கம் 35 வரையிலான நீர்த்தேக்கங்களுக்குள் விடுவிக்கப்பட்டிருந்தன. இம் மீன் குஞ்சுகள் தொழில்நுட்ப வழிமுறைகள் மீறப்பட்ட நிலையில் போக்குவரத்துச் செய்யப்பட்டதன் காரணமாக 35 முதல் 50 வீதமானவை இறந்து போவதாக மீனவர் சங்கங்களின் மூலம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தெளிவாகியது. | மீன் குஞ்சுகள் போக்குவரத்துச் செய்யப்படும் போது உரிய தொழில்நுட்ப வழிமுறைகளைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல். | அநேகமான மீனவர் சங்கங்கள் இயக்கத்தில் உள்ளவையல்ல. வரி அமைச்சின் மூலமும் மீன்கள் நீர்த்தேக்கங்களுக்குள் விடுவிக்கப்படுகின்றன. |
| (இ) | நன்னீர் மீனவர் சமூக நலன்புரி வேலைத்திட்டத்தின் கீழ் 2015 முதல் 2019 வரையிலான காலப்பகுதியினுள் கூட்டுத்தொகை ரூபா. 4,306,077 பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் மீனவர் சங்கங்களுக்கு வழங்கியிருந்த போதும் தேவைகளை இனங்கண்டு மீன்பிடி நடவடிக்கைகளுக்கு உகந்த | தேவைகளை இனங்கண்டு அதனடிப்படையில் உதவிகளை வழங்குதல் மற்றும் வழங்கப்பட்ட உதவிகள் குறித்த நிறுவனங்களில் முறையாக ஆவணப்படுத்தப்படு வதற்கான | வழங்கப்பட்டுள்ள உதவிகளுக்கு மேலதிகமாக வேறு தொழில்நுட்ப உபகரணங்கள் தொடர்பான வேண்டுகோல்கள் மீனவர் சங்கங்களினால் சமர்ப்பிக்கப்படவில்லை. எதிர்காலத்தில் முறையாக ஆவணப்படுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | மீன்பிடி உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்படாதிருந்ததுடன், மீனவர் சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த மீன்பிடி உபகரணங்கள் அச் சங்கங்களில் முறையாக ஆவணப்படுத்தப்பட்டிருக்கவுமில்லை. | நடவடிக்கை எடுத்தல். | தொடர்பாக குறித்த சங்கங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

### 5.8.3 எதிர்பார்த்த பெறுபேறுகளை அடையாமை

-------------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 முதல் 2019 வரையிலான வருடங்களில் மாகாண நிலையான அபிவிருத்தி ஒதுக்கீட்டின் கீழ் கூட்டுத்தொகை ரூபா. 11,744,000 நிதி ஒதுக்கீட்டின் மூலம் செயற்படுத்தப்பட்டிருந்த விதை நெல் திட்டத்துடன் தொடர்பான விவசாயத் திணைக்களத்தின் விதைகள் ஆய்வுப் பிரிவின் மூலம் வழங்கப்பட்டிருந்த விதை ஆராய்ச்சி அறிக்கையின் பிரகாரம் கண்டி மாவட்டத்தில் 2017 தொடக்கம் 2019 வரையிலான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட பண்ணைகள் மூலமாக வழங்கப்பட்டுள்ள உத்தரவாதம் அளிக்கப்பட்ட 560 புசல் விதை நெல்லின் 182 பரீட்சாத்த மாதிரி முறைகளில் | குறித்த துறைசார் உத்தியோகத்தர்களினால் மேற்பார்வை மற்றும் பின்னூட்டல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படல். | உரிய முறையில் மழை கிடைக்காததன் காரணமாக பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் தாமதமாக ஆரம்பமாவதால் அறுவடையின் போதும் மழை பொழிகிறது. இதன் காரணமாக 13 வீதத்திற்குக் குறைவான ஈரலிப்பினை பேணி வருவது சிரமமாக உள்ளது. தற்போது காணப்படுகின்ற காலநிலை உற்பத்தியின் தரத்தில் தாக்கம் செலுத்தியுள்ளது. விசேடமாக இந்த விதைகளின் ஈரப்பதன் காரணமாக விவசாயத் திணைக்களத்தின் விதை |

| | | | |
|---|---|---|---|
| | 84 முறைகள் தோல்வியடைந்திருந்தன. அதேபோன்று மாத்தளை மாவட்டத்தில் 2017 தொடக்கம் 2019 வரையிலான காலப்பகுதியில் 18,364 புசல் உத்தரவாதம் அளிக்கப்பட்ட விதை நெல்லில் ரூபா. 3.9 மில்லியனை அண்மித்த பெறுமதி கொண்ட சுமார் 2,542 புசல் நெல்லின் தரம் தொடர்பான பரிசோதனைகள் தோல்வியடைந்திருந்தன. இதனடிப்படையில் பதிவுசெய்யப்பட்ட பண்ணைகள் மூலமாக பெறப்படுகின்ற உத்தரவாதம் அளிக்கப்பட்ட விதை நெல்லின் தோல்வியடையும் அளவு கூடுதலாக இருந்த போதும் அது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களின் தலையீடு காணப்படவில்லை. | | உத்தரவாதப் பிரிவின் தரம் தொடர்பான பெறுபேறுகள் தோல்வியானதாக இருந்த போதும் அவ் விதைகள் விவசாயிகளினால் விற்பனை செய்யப்பட்டுள்ளன. |
| (ஆ) | பெரிய வெங்காய விதை உள்நாட்டுத் தேவையில் 40 வீதத்திற்கும் அதிகமான உற்பத்தியாகிய சுமார் 15000 – 20000 கிலோகிராம் வரை மாத்தளை மாவட்ட விவசாயிகளின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் மாகாண விவசாயத் திணைக்களத்தினால் 2015 – 2018 ஆண்டுகளில் பெரிய வெங்காய விதை உற்பத்திக்காக மாகாண நிலையான அபிவிருத்தி | விவசாயிகளின் பிரச்சினைகள் மற்றும் ஆபத்தான துறைகள் தொடர்பில் கவனம் செலுத்தி தேசிய உற்பத்திக்கான பங்களிப்பினை அதிகரித்துக்கொள்வதற்கு இயன்றளவு நடவடிக்கை எடுத்தல் மற்றும் பின்னூட்டல் மேற்கொள்ளல். | 2018ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட விதைகளை விற்பனை செய்வதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக 2019ஆம் ஆண்டு விவசாயிகளை விதை உற்பத்தியில் ஈடுபடுத்த முடியாது போனது. 2020ஆம் ஆண்டு தொடக்கம் இப் பயிர்ச்செய்கையினை பழைய நிலைக்குக் கொண்டுவருவதற்கான |

| | | | |
|---|---|---|---|
| | ஒதுக்கீட்டின் கீழ் ரூபா. 26,475,000 செலவிடப் பட்டிருந்தது. எனினும் விதை உற்பத்தியானது தொடர்ச்சியாக 17500 இலிருந்து 4407 கிலோவாக பாரிய வீழ்ச்சியைக் காட்டியது. இதனடிப்படையில் தீவிரமாக உற்பத்தி மட்டுப்படுத்தப்பட்ட பெரிய வெங்காய உற்பத்தி தொடர்பாக 2019ஆம் ஆண்டு மத்திய மாகாண விவசாயத் திணைக்களத்தினால் எந்தவித செயற்திட்டங்களும் மேற்கொள்ளப்படவில்லை. | | விளம்பர ரீதியான மற்றும் விழிப்புனர்வு நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது செயற்படுத்தப்பட்டு வருகின்றன. |
| (இ) | மத்திய மாகாண இளைஞர் விவகார, மகளிர் விவகார, கிராமிய அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் தொழில் அமைச்சு மூலம் சுய தொழில்களை உருவாக்கும் நோக்கில் 2016 தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரை ரூபா. 45,581,286 பெறுமதியான 1708 ஜுகி, ஓவர்லொக், சிக்சாக் மற்றும் சாதாரண தையல் இயந்திரங்கள் குறைந்த வருமானம் கொண்ட பெண்களுக்கு பகிர்ந்தளிக்கப் பட்டிருந்த போதும் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டதன் நோக்கம் அடையப்பெறாத சந்தர்ப்பங்கள் தாராளமாகக் காணப்பட்டன. | எதிர்பார்த் பலன்களைப் பெறக்கூடிய திட்டங்களுக்காக செலவிடல். | மக்கள் பிரதிநிதிகளின் நிதி ஒதுக்கீட்டின கீழ் குறித்த திட்டத்தை செயற்படுத்துவதற்காக மாத்திரம் உதவி பெறுவோரின் பெயர்ப் பட்டியலோடு கிடைக்கப்பெற்ற அமைச்சின் செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், 2019ஆம் ஆண்டு பின்னூட்டல் செய்யப்பட்டுள்ளது. |

### 5.8.4 முறையாக கையேற்கப்படாத காணிகளில் திட்டங்களை ஆரம்பித்தல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் மூலம் நீண்ட காலமாக உரிமை கொண்டாடப்படுகின்ற கலேவெல நகரத்தின் மத்தியில் அமைந்துள்ள வைத்தியர் உத்தியோகபூர்வ இல்லம் அமைந்துள்ள காணியை சட்டரீதியாக கையேற்பதற்கான நடவடிக்கை இதுவரை எடுக்கப்படவில்லை. | குறித்த காணிகளை சட்டரீதியாக கையேற்பதற்கான நடவடிக்கை எடுத்தல். | குறைபாடுகளை ஏற்றுக்கொள்கிறேன். |
| (ஆ) | மாத்தளை வலயக் காரியாலயத்திற்குச் சொந்தமான 61 பாடசாலைகளின் காணிகள் சம்பந்தமான தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு அக் காணிகளை மத்திய மாகாண கல்வித் திணைக்களத்திற்கு கையேற் பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பாடசாலைக் காணிகளை கையேற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளல். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (இ) | மாகாண கால்நடை உற்பத்திகள் மற்றும் சுகாதார பணிப்பாளர் காரியாலயம், 24 மிருக வைத்திய காரியாலயங்கள், 02 பிரதி பணிப்பாளர் காரியாலயங்கள், பேராதனை மற்றும் நுவரெலியா மிருக வைத்தியசாலை மற்றும் திணைக்களத்திற்குச் சொந்தமான அரச | பாடசாலைக் காணிகளை கையேற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளல். | குறித்த காணிகளை கையேற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை தயவுடன் தெரிவிக்கிறேன். மேலும் கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய நில அளவை திணைக்களத்திற்குச் |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகபூர்வ இல்லங்கள் அமைந்துள்ள 22 காணிகளின் உரிமை திணைக்களத்திற்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | | சென்று இது தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | வலயப் பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் மாத்தளை ஹோட்டல் பாடசாலை அமைந்துள்ள கட்டடங்கள் முறையாக கையேற்கப்படாது புனர் நிர்மாணப் பணிகளுக்காக 2018 மற்றும் 2019 வருடங்களில் முறையே ரூபா. 1,667,500 மற்றும் 8,283,119 செலவிடப்பட்டிருந்தது. | குறித்த காணிகளை முறையாக கையேற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளல். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (உ) | விவசாயத் திணைக்களத்தினால் பயன்படுத்தப்படுகின்ற 7.4327 ஹெக்டயார் பரப்பான காணி உள்ளடங்கிய 04 காணிகளுடன் கூடிய 05 காணிகளை முறையாக கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | திணைக்களத்திற்குச் சொந்தமான காணியை சட்டரீதியாக கையேற்பதற்கான நடவடிக்கை எடுத்தல். | ஏற்றுக்கொள்கிறேன். இக் ாணிகளை கையேற்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் இதுவரையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. |

**5.9 சொத்து முகாமைத்துவம்**

---------------------------------------

**5.9.1 சொத்துக்கள் ஆவணப்படுத்தப்படாமை**

----------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தில் பேணப்பட்டு | திணைக்களத்திற்குச் சொந்தமான சகல | முதிப்பீட்டுப் பெறுமதியினை உள்ளடக்கி ஆவணம் உரிய |

| | | |
|---|---|---|
| வருகின்ற நிலையான சொத்து ஆவணத்தில் ரூபா. 74,795,000 ஆகவிருந்த போக்குவரத்து உபகரணங்கள் மற்றும் ரூபா. 35,000 ஆகவிருந்த மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி பதிவு செய்யப்படாதிருந்ததுடன் ரூபா. 11,730,000 பெறுமதியான அலுவலகக் கட்டிடம் மற்றும் ரூபா 325,908,000 ஆன அலுவலக கட்டிடம் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்ட ஆண்டு, மதிப்பீட்டுப் பெறுமதி ஆகியன நிலையான சொத்து பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டு நாளதுவரையாக்கல் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடைமுறை அல்லாத சொத்துக்களும் ஆவணப்படுத்தப்பட்டு நாளதுவரையாக்கல் செய்யப்பட்டு பேணுவதற்கான நடவடிக்கை எடுத்தல். | படிவத்தின் அடிப்படையில் நாளதுவரையாக்கல் செய்யப்படுகின்றது. |

### 5.9.2 விளைவற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

----------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சபை செயலாளருக்குரிய ரூபா 5,000,000 பெறுமதியான மோட்டார் வண்டியொன்று மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத ஜீப் வண்டியொன்று விவசாய அமைச்சிற்குரிய பெறுமதி குறிப்பிடப்படாத 02 வாகனங்களும் உட்பட 04 வாகனங்கள் 04 மாதங்கள் முதல் 4 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன. | திருத்தம் செய்து பயன்படுத்தவோ அல்லது சுற்றறிக்கையின் பிரகாரம் கைதவிர்க்கவோ நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபை செயலகத்திற்குரிய வாகனத்தை பிரதான செயலகத்திற்கு மீண்டும் பொறுப்பேற்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. போதியளவு வாகனங்கள் காணப்படுவதால் கஷ்டான வீதிகளில் '-1322 ஆம் இலக்க வாகனத்தை பயன்படுத்துதல் சாதகமாக இன்மையால் 32-3910 ஆம் இலக்க வாகனம் மிகவும் பழைய வாகனமாக இருப்பதால் திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுத்துள்ளேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சுற்றலா மற்றும் விவசாய திணைக்களத்திற்குரிய கட்டிடமொன்றும் 07 அரசின் வீடுகளும் 02 ஆண்டு முதல் 12 ஆண்டுகள் வரையான காலம் மற்றும் 2003 ஆம் ஆண்டில் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்ட ரூபா 8,916,173 ஆன செலவு செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த ஹங்குரன்கெத கோனதன்ன பிரதேச வைத்தயசாலையின் பிரசவ மற்றும் சிறுவர் சிகச்சை கட்டிடம் 15 ஆண்டுகளாக பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | விளைவற்ற வளங்களை ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுற்றுலா திணைக்களத்தின் கட்டிடம் 2017 யூன் மாதம் பழைய கட்டிடத்தை உடைத்து அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமையால் செலவினம் மேற்கொண்டு பராமரிப்பது ஆக்கபூர்வானதல்ல. |
| (இ) | விவசாய திணைக்களத்திற்கும் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்குரிய 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத 2 கை உழவு இயந்திரங்கள் உழவு இயந்திரமொன்று, முச்சக்கர வண்டியொன்று மற்றும் 12 மோட்டார் சைக்கில்கள் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத சொத்துக்களை சுற்றறிக்கையின் பிரகாரம் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விவசாய திணைக்களத்திற்குரிய வாகனங்களை தற்போது பயன்படுத்தாமையால் ஏல விற்பனை செய்வதற்கும் அல்லது அகற்றுவதற்கும் மாகாண விவசாயப் பணிப்பாளருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்குரிய மோட்டார் சைக்கில்கள் தொடர்பாக ஏலவிற்பனை செயற்பாடுகள் பிரதான செயலகத்தினால் மேற்கொள்வதால் பிரதான செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | மாகாண கலாசார திணைக்களத்தினால் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 460,000 ஆன கிரயமொன்றில் ஆரம்பிக்கப்பட்ட அலுவலக தேவைப்பாடுகளுக்காக தயாரிக்கப்பட்ட கணனி மென்பொருள் மற்றும் அதனை செயறடதழறனாக | குறைப்பயன்பாட்டுடன் காணப்படும் சொத்துக்களை செயற்திறனாக ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்தல். | விமுறை விண்ணப்பித்தல், செயன்முன்னேற்றத்தைப் பெற்றுக்கொள்ளல், பிரயாண செலவின வேண்டுகோள், நிகழ்ச்சித்திட்ட |

| | | |
|---|---|---|
| ஈடுபடுத்துவுதற்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 1,347,500 கிரயத்துடன் கொள்வனவு செய்யப்பட்ட 55 டெப் இயந்திரங்கள் செயற்திறனாக நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை | | விபரங்களை பரீட்சித்தல் நோக்கமாகமாக இருந்தன எதிர்வரும் காலங்களில் மென்பொருள் ஊடாக சமர்ப்பிக்கப்படாத உறுதிச்சீட்டுக்களை அங்கீகரிக்காமல் தவிர்ப்பதாக குறிப்பிடுகின்றேன். |

## 5.9.2 வாகனப் பயன்பாடு

--------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு<br>-------------------------------- | பரிந்துரை<br>------------ | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை<br>---------------------------------- |
|---|---|---|
| கண்டி மற்றும் மாத்தளை பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகங்களுக்குரிய 11 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ள எரிபொருள் நாளாந்த ஓட்டக் குறிப்புக்களின் பிரகாரம் மற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கு இடையே 3449 லீற்றர் வேறுபாடொன்று காணப்பட்டதுடன் அதன் பெறுமதி ரூபா 358,698 ஆக இருந்தது. | எரிபொருள் செலவினம் நாளாந்த ஓட்டக் குறிப்பு விபரங்களுக்கு சமமாக இருத்தல் வேண்டும் | செலவிடப்பட்ட எரிபொருள் செலவினம் விடுபட்டுள்ளது. 42-0634 ஆம் இலக்க லொறிக்காக எரிபொருள் செலவினம் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. ஏனைய நிறவனங்களினால் எரிபொருள் செலவினம் மேற்கொள்ளப்பட்டமை இவ்வேறுபாடுகளுக்கு காரணங்களாக உள்ளன. |

## 5.10 பதவியணியினர் நிர்வாகம்

------------------------------------------

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான நிலைமை கீழே காண்பிக்கப்படுகின்றது.

**5.10.1 மாகாண சபை, அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்கள் (பாடசாலை மற்றும் சுகாதார பதவியணியினர் நீங்கலாக)**

| | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது | வெற்றிடங்கள் | மிகை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 1,019 | 755 | 292 | 29 |
| மூன்றாம் நிலை | 483 | 389 | 94 | 1 |
| இரண்டாம் நிலை | 7,122 | 5,349 | 1,922 | 160 |
| ஆரம்ப நிலை | 7,380 | 5,986 | 1,357 | 408 |
| ஒப்பந்த அடிப்படை | 38 | 75 | - | - |
| அமைய | - | 408 | - | - |
| சமயா சமய | - | 19 | - | - |
| ஏனைய (நிரந்தர படிகள்) | 13 | | 12 | |
| ஆசிரியர் உதவியாளர் | - | 1,123 | - | 1,123 |
| தனிபபட்ட பதவியணியினர் (அமைச்சர்கள்) | 89 | 15 | 74 | - |
| ஏனைய (பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபை | 329 | 263 | 61 | - |
| மொத்தம் | 16,473 | 14,382 | 3,812 | 1,721 |

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் மொத்த பதவியணியில் 6 பதவிகளில் 132 வெற்றிடங்கள் காணப்பட்டன. பதவியின் | வெற்றிடங்கள் முறையாக இனங்காணப்பட்டு | அலுவலக மட்ட ஊழியர்களை ஒதுக்குவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | தலைமை அலுவலகத்திற்கும் மாவட்ட செயலகங்களுக்குமாக வெவ்வேறாக அங்கீகரித்துக் கொள்ளாமல் இருந்தமை காரணமாக ஒவ்வொரு மாவட்ட அலுவலகத்தின் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள் தொடர்பாக அவதானிக்க முடிஎயாமல் இருந்தது. | நிரப்புவதற்காக நடவடிக்கை எடுத்தல். | எடுத்துள்ளதுடன் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு வெற்றிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) | வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சாரம் மற்றும் எரிசக்தி, வீடுகள் மற்றும் நிர்மாண அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட 76 அபிவிருத்தி உத்தயோகத்தர்களில் 44 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 24 உத்தியோகத்தர்கள் அமைச்சின் கீழான 03 திணைக்களங்களுக்கு இணைக்கப்பட்டு அவர்களுக்குரிய அமைச்சின் செலவினங்கள் மூலம் சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. அம்மூன்று திணைக்களங்களிலும் 18 அபிவிருத்தி உத்தயோகத்தர்கள் மிகையாக காணப்பட்டனர். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் திருத்தம் செய்யப்பட வேண்டும். | அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தயோகத்தர்களின் எண்ணிக்கை 76 ஆக இருந்த போதும் அமைச்சிற்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தயோகத்தர்களின் எண்ணிக்கை 44 ஆகும். |
| (இ) | மாகாண சுகாதார அமைச்சு போலியான சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 07 அமைய சுகாதார உதவியாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டு 2017 சனவரி முதல் 2019 யூன் வரை சம்பளமாக ரூபா 2,457,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | போலிக் கல்விச் சான்றிதழ்கள் சமர்ப்பித்த ஊழியர்கள் தொடர்பாக முறையான நடைமுறையொன்றை எடுத்தல். | கருத்து தெரிவிக்கவில்லை. |
| (ஈ) | பிரதான செயலகத்தில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 சிரேஷ்ட நிலை பதவிகளும், 07 மூன்றாம் நிலை பதவிகளும் 133 இரண்டாம் நிலை பதவிகளுமாக 167 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் இரண்டாம் நிலை ஊழியர்களில் 03 பேர் மிகையாக காணப்பட்டனர். | அத்தியவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் | நாடளாவிய சேவை மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய அமைமச்சுக்களிலிருந்து வேண்டுகோள் விடப்பட்டுள்ளன. முகாமைத்துவ சேவை |

உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பதற்கு போட்டிப் பரீட்சைகளை நடாத்தியுள்ளதுடன் சம்பள கொடுப்பனவிற்காக நிதிஏற்பாடு கிடைத்தவுடன் ஆட்சேர்ப்பு செய்வதாகவும்

### 5.10.2 பாடசாலைப் பதவியணியினர்

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| அதிபர் | 1,458 | 990 | 471 | 3 |
| பிரதி அதிபர்கள் / உதவி அதிபர்கள் | 575 | 628 | 95 | 148 |
| ஆசிரியர்கள் | 27,714 | 28,350 | 434 | 1,070 |
| சிற்றூழியர்கள் மற்றும் உதவி பதவியணியினர் | 2,222 | 1,473 | 1,070 | 321 |
| **மொத்தம்** | 31,969 | 31,441 | 2,070 | 1,542 |

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மாகாண கல்வித் திணைக்களத்தின் பதவியணிக்கு 04 ஆசிரியர்கள் இணைக்கப்பட்டிருந்ததுடன் 07 உத்தியோகத்தர்கள் 04 மாதங்கள் முதல் 10 ஆண்டுகள் வரையான காலமாக திணைக்களத்தின் கீழ் சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டு அலுவலகத்திற்கு | திணைக்களத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில் பதவியணியினர் திருத்தம் செய்யப்படல் வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி திருத்தம் செய்யப்படா மையால் திணைக்களத்தின் தேவைப்பாட்டை இனங்காண நேர்ந்தமை கடமை தேவைப்பாடு மற்றும் சொந்த தேவை அடிப்படையில் அலுவலகங்களுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | இணைக்கப்பட்டிருந்தனர். தொழில்நுட்ப அல்லாத சேவையில் 09 பேரும் ஏனைய சேவைகளுக்குரிய 4 பேர் ஏனைய அலுவலகங்களிலிருந்து சம்பளக் கொடுப்பனவு செய்து திணைக்களத்திற்கு இணைக்கப் பட்டிருந்தமையால் தொழில் நுட்பமல்லாத சேவையில் 07 பேர் மிகையாக காணப்பட்டனர். | | இணைத்தல் மற்றும் ஊழியர்கள் போதியளவில் இல்லாமை காரணங்களாக இருந்தன. |
| (ஆ) | கலேவல வலயத்திற்குரிய 47 பாடசாலைகள் நாவுல வலயத்திற்குரிய 15 பாடசாலைகள், மாத்தளை வலயத்திற்குரிய 36 பாடசாலைகள் வில்கமுவ வலயத்திற்குரிய 26 பாடசாலைகள் வெற்றிடங்களுக்காக முறையான நடைமுறையொன்றில்லாமல் இலங்கை ஆசிரியர் சேவையின் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். | கடமை கையளிப்பிற்கு பொருத்தமான நடைமுறையொன்றை தயாரித்தல் | கருத்து தெரிவிக்கவில்லை. |
| (இ) | கலேவல கல்வி வலயத்தில் 09 ஆசிரிய ஆலோசகர்களுக்காக 09 ஆசிரியர்கள் வலயக் கல்வி அலுவலகத்திற்கு இணைக்கப் பட்டிருந்தமையால் அந்த ஆசிரியர்களின் சேவை பாடசாலைகளுக்கு இழக்கப்பட்டிருந்ததுடன் அப்பாடசாலைகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாமல் இருந்தது. | ஆசிரிய ஆலோசகர் பதவிக்காக இணைக்கப்பட்ட ஆசிரியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடைமுறையொன்றை தயாரித்தல் | கருத்து தெரிவிக்கவில்லை. |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதி வரை மாத்தளை வலயத்தின் பாடசாலைகளில் 47 சிங்கள மொழி மூல ஆசிரியர்களும் 54 தமிழ் மொழி மூல ஆசிரியர்களும் வெற்றிடங்களாக காணப்பட்டன. | ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பபட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |

### 5.10.3 சுகாதார பதவியணியினர்

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது | வெற்றிடங்கள் | மிகை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 1,308 | 1,000 | 308 | - |
| மூன்றாம் நிலை | 229 | 173 | 56 | - |
| இரண்டாம் நிலை | 4,234 | 3,334 | 914 | 14 |
| ஆரம்ப நிலை | 3,610 | 2,408 | 1,182 | - |
| ஒப்பந்தம் | - | 20 | - | - |
| அமைய | -------- | --------- | -------- | ---- |
| மொத்தம் | 9,381 | 6,935 | 2,460 | 14 |

## 6. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 6.1 ஆண்டறிக்கை சபையில் சமர்ப்பித்தல்

1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கடந்த ஆண்டுகளின் மத்திய மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மாகாண சபையில் சமர்ப்பித்தல் நிலைமை பின்வருமாறு

| ஆண்டு | அறிக்கை வழங்கப்பட்ட திகதி | சபையில் முன்வைத்த திகதி |
|---|---|---|
| 2014 | 2015.10.08 | 2015.11.03 |
| 2015 | 2016.11.16 | 2017.07.18 |
| 2016 | 2017.11.27 | 2018.06.19 |
| 2017 | 2018.10.31 | - |
| 2018 | 2019.05.31 | - |

## 6.2 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மத்திய மாகாண கல்வி திணைக்களத்திற்குரிய மாகாண நிதி விதி 54.6 பரிசோதனை மூலம் பதிவழிப்பதற்கு, சீராக்கம் செய்வதற்கும் அகற்றுவதற்கும் பரிந்துரைக்கப்பட்டிருந்த முறையே ரூபா 5,747,195 தொகை ரூபா 3,389,528 மற்றும் ரூபா 3,954,598 ஆன கடன் மீதிகள் தொடர்பாக நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்குக் குழு கட்டளை செயற்படுத்தப்பட வேண்டும் | அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. |
| (ஆ) | கண்டி பிரதேச மருந்துக் களஞ்சியத்தில் 2001 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட ரூபா 1,217,482 களஞ்சிய இருப்பு பற்றாக்குறை தொடர்பாக மாகாண நிதி விதி 54.6 இன் கீழ் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு களஞ்சிய காப்பாளர் 2002 ஏப்ரல் 18 ஆந் திகதி ஓய்வூதிய சட்டவிதிக் கோவையின் 2.12 ஆம் பிரிவின் கீழ் ஓய்வு பெறச்செய்யப்பட்டு 15 ஆண்டு குறித்த களஞ்சிய பற்றாக்குறையை அரசின் கட்டணங்களுடன் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | களஞ்சிய பொருள் பற்றாக்குறையை பொறுப்பான தரப்பினரை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் | பந்தியை ஏற்றுக் கொள்கின்றேன். |

| | | |
|---|---|---|
| (இ) 2007 முதல் 2014 வரையான ஆண்டுகளுக்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடககப்பட்டிருந்த 09 நிறுவனஙங்களின் 105 கணக்காய்வுப் பந்திகள் தொடர்பாக கணக்குக் குழு கட்டளை செயற்படுத்துதல் மந்தகெதியில் காணப்பட்டன. | கட்டளை செயற்படுத்த நடவடிக்கை எடுத்தல் | கருத்து தெரிவிக்கவில்லை. |

## 6.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மத்திய மாகாண சபையின் திட்டமிடல் திணைக்களத்தின் கீழ் நிர்வாக திட்டமிடல் துறைக்குரிய அறிவினைக் கொண்ட 09 பேர் உட்பட 37 பேருடனான பதவியணியொன்று இணைக்கப்பட்டிருக்கையில் மத்திய மாகாண சபைக்கு நிலைபேறான அபிவிருத்திக்காக ஐந்தாண்டு திட்டமொன்றை தயாரிப்பதற்காக அத்துறை தொடர்பாக எவ்வித தொடர்புமில்லாத வலய பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்துடன் ரூபா 4,695,000 மில்லியனான ஒப்பந்தமொன்றிற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அத்திட்டம் தொடர்பாக அறிவூட்டுவதற்காக நேரடியாக பொறுப்பினை வகிக்கும் 07 பேருக்கு ரூபா 1,753,861 மில்லியன் படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் இந்நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமையால் 2020 ஆம் ஆண்டிற்காக இத்திட்டத்தை செயற்படுத்து வதற்கு முடியாமல் இருந்தது. | நிறுவனத்திடமுள்ள வளங்களலிருந்து ஆகக்கூடிய பயன்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இத்திட்டத்தினை தயாரிப்பதற்கு பங்களிப்பினை வழங்கிய ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் வேண்டுகோளின் பிரகாரம் வெளித்தரப்பினரைக் கொண்டு திட்டம் தயாரிக்கப்பட்டது. இவ்வாறான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்குள்ள ஓரே நிறுவனமான வலய பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் மூலம் இதனை நிறைவேற்றிக் கொள்ளப்பட்டது. |